மொழிச் சிக்கல்கள்

குறித்த

சர்வதேசக் கருத்துக்கள்

கல்வி, அறிவு, அறிவியல் மற்றும்
ஆங்கிலம் பயில்வதற்குத்
தாய்மொழியே திறவுகோல்

ஆங்கிலத்தில்

ஜோகா சிங்

தமிழில்

கணா. குறிஞ்சி

- 94433 07681 -

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

மொழிச் சிக்கல்கள் குறித்த சர்வதேசக் கருத்துக்கள்

(கல்வி, அறிவு, அறிவியல் மற்றும் ஆங்கிலம் பயில்வதற்குத் தாய்மொழியே திறவுகோல்)

மூலநூல்	:	International Opinion on Language Issues
Author	:	JOGA SINGH
Year of Publication	:	2013
தமிழாக்கம்	:	கண. குறிஞ்சி
முதல் பதிப்பு	:	செப்டம்பர், 2013 திருவள்ளுவர் ஆண்டு 2044
வெளியீடு	:	**புதுமலர் பதிப்பகம்** நந்தி-காவ்யா வளாகம் முதல் வீதி, சக்திநகர் (மேற்கு) திண்டல், ஈரோடு - 638 012 94433 07681
மின்னஞ்சல்	:	gana.kurinji@gmail.com
அட்டை வடிவமைப்பு மற்றும் அச்சாக்கம்	:	ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ், சென்னை
விலை	:	ரூபாய் 25

நன்றி

இந்த ஆவணத்தைத் தமிழில்
மொழியாக்கம் செய்ய ஊக்கமளித்த
பேராசிரியர். ஜோகா சிங் அவர்களுக்கும் -

இந்நூலை எமக்கு ஆற்றுப்படுத்திய
ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. அ.கணேசமூர்த்தி அவர்களுக்கும் -

நூலாசிரியர் முன்னுரை

மனிதகுலச் செயற்பாடுகளின் ஒவ்வொரு பகுதியிலும் மொழி ஊடுருவி நிற்கிறது. எந்தவொரு மக்களது பௌதீக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும் மிக முக்கியமான இந்தத் துறை, இந்தியக் கொள்கை வகுப்பாளர்களால் முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறது. இதைப் புறக்கணிப்பது மட்டுமல்லாமல் இந்தியாவிலுள்ள தாய்மொழிகள் பற்றிய அரசியல் சட்டப்பிரிவுகள் கூடக் காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன. இச்சட்டப்பிரிவுகள்தான், புதிய இந்தியாவின் சிற்பிகளாகிய விடுதலைப் போராட்ட வீரர்களின் ஞானத்தை வெளிப்படுத்தக்கூடியதாக விளங்குகின்றன. இந்தச் சட்டப் பிரிவுகள், ஒவ்வொரு இந்தியனுக்கும் தாய்மொழி மூலம் கற்பதற்கான உரிமையை வழங்குகின்றன. கொள்கை வகுப்பாளர்களது இத்தகைய கொடுமையான புறக்கணிப்பு, இந்திய தேசிய வாழ்வின் - குறிப்பாக எந்தவொரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் அடிப்படைக் கூறாக விளங்கும் கல்வித்துறையின் - முக்கியமான பல்வேறு பகுதிகளை முழுமையாகக் குழப்பிவிட்டிருக்கிறது.

ஆசியாவிலுள்ள முதன்மையான 50 பல்கலைக்கழகங்களில், இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றுகூட தகுதிப் பட்டியலில் இல்லை என்பது வியப்பிற்குரியதல்ல. **எந்தவொரு ஆசிய நாடும், அதன் குடிமக்களுக்கு அந்நிய மொழி மூலம் கல்வி கற்பிப்பதில்லை என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்**. வணிகச் செயல்பாடுகளிலும் கூட, விடுதலைக்குப் பிறகு உலக வர்த்தகத்தில் இந்தியா வின் பங்கு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. ஐந்து கோடி மக்கள் தொகை மட்டுமே கொண்ட தென்கொரியா (இந்தியாவின் மக்கள் தொகையில் 25ல் ஒரு பாகம் கொண்டது) உலக வர்த்தகத்தில் பதினைந்து இடங்களுக்கு முன்னால் உயர்ந்து நிற்கிறது.

ஒருவரின் தாய்மொழி மூலமே வெற்றிகரமான கல்வி சாத்தியமாகும் என்பதைச் சர்வதேச ஆய்வுகள் மிகப்பெரிய அளவில் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. மற்ற விஷயங்கள் இணையாக இருந்தால், தாய்மொழி வழியாகக் கல்வி கற்கும் ஒரு குழந்தை,

அந்த அந்நிய மொழி வழியாகவே கல்வி கற்கும் குழந்தையை விட, அந்த அந்நிய மொழியைச் சிறப்பாகக் கற்றுக் கொள்கிறது. இது வியப்பாக இருக்கலாம், ஆனால் இதுதான் மிகவும் உண்மை

மொழிக்கொள்கைச் சிக்கல்கள் குறித்து அறியாமை, இந்தியக் கொள்கை வகுப்பாளர்களது மனதில் ஊடுருவி நிற்கிறது. எனவே இது பற்றிப் பேசாமலிருப்பதே நல்லது. மொழிக் கொள் கைச் சிக்கல்கள் குறித்துச் சர்வதேச ஆய்வுகள் மற்றும் நடைமுறை குறித்த முடிவுகளைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுவதன் மூலம், இத்தகைய அறியாமையைப் போக்கும் ஒரு முயற்சியாக இந்த ஆவணம் திகழ்கிறது. எனது சக இந்தியக் குடிமக்கள், இந்த முயற்சி யின் பயனை உணர்வார்கள் என நான் நம்புகிறேன்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளு மன்ற உறுப்பினர் திரு. அ. கணேசமூர்த்தி அவர்களுக்கு எனது ஆழ்ந்த நன்றியினை வெளிப்படுத்த இந்த வாய்ப்பினை நான் பயன் படுத்திக் கொள்கிறேன். இந்தியாவிலுள்ள மிகப் பெரும் மொழியா கிய தமிழ்மொழியில் இந்த ஆவணம் வெளியாவதற்கு அவர் மட்டுமே முழுமையான காரணகர்த்தாவாக இருந்துள்ளார்.

இப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள அனைவருக்கும் இந்த ஆவணம் அனுப்பப்பட்டது. ஆனால் திரு.அ. கணேசமூர்த்தி அவர்கள் இதில் காட்டிய தீவிர ஈடுபாட் டைப்போல, வேறு எவரொருவரும் ஈடுபாடு காட்டவில்லை என் பதை நான் கட்டாயம் பதிவு செய்தாக வேண்டும். இந்தச் சிக்கலின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தமைக்காக, நான் அவருக்கு நன்றிக் கடன்பட்டுள்ளேன்.

சிரமமெடுத்து இந்த ஆவணத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்த கண.குறிஞ்சி அவர்களுக்கும் நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன். அவரது ஆர்வமிக்க முயற்சி இல்லாமலிருந்தால், இது சாத்தியமாகி இருக்காது.

இந்த நூல் பஞ்சாபி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏற்கெனவே பதிப்பிக்கப்பட்டுள்ளது. மைதிலி மற்றும் மராத்தி மொழிகளில் இது மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தெலுங்கு, மலையாளம், நேபாளி, பங்களா, கொங்கணி மற்றும் டோக்ரி மொழிகளில் மொழியாக்கம் நடைபெற்று வருகிறது.

இந்தியாவிலுள்ள தனிநபர்கள், (இந்த ஆவணத்தை இணை யத்தின் வழியாகப் படித்தபிறகு) அவர்களாகவே இதையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைத்

தருகிறது. இவர்களில் பெரும்பான்மையோர், இதற்கு முன் என்னோடு எவ்வகையிலும் தொடர்பு இல்லாதவர்கள் என்பது மேலும் மன நிறைவையளிக்கக்கூடியதாகும். அவர்கள் அனைவரையும் நான் வணங்குகிறேன்.

பெருஞ்சிறப்பு வாய்ந்த தொல்காப்பியரது தாய்மொழியாகிய தமிழில் இந்த ஆவணம் வெளியாவது விவரிக்க முடியாத மகிழ்ச்சியை எனக்கு அளிக்கிறது. எனது ஆவணத்தின் தமிழ் வடிவத்தைத் தமிழ் மக்களுக்குக் காணிக்கை ஆக்குகிறேன்.

பாட்டியாலா, பஞ்சாப்
ஆகஸ்டு 24 / 2013

- ஜோகா சிங்

ஃ ஃ ஃ

அணிந்துரை

அ. கணேசமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்

காலத்தால் மூத்ததும், வளத்தால் முதன்மையானதுமான நம் தாய்மொழியாம் தமிழ்மொழி, பேச்சு வழக்கிலிருந்தும் எழுத்து வழக்கிலிருந்தும் மெல்ல மெல்லச் சிதைந்து வருவதை வேதனை யுடன் பார்க்கிறோம்.

ஆங்கிலம்தான் அறிவின் திறவுகோல்; ஆங்கிலம்தான், வாழ்வில் வளம் சேர்க்குமென அடிமைப்பட்டுக் கிடக்கும் அறிவும், ஆங்கிலத்தில் பேசுவதே மரியாதைக்குரியது என்ற போலித்தனமும், தாய்மொழியைப் புறம் தள்ளக் காரணமாகியுள்ளன.

இந்தப் போலித்தனத்திற்கும் அறிவீனத்திற்கும் அங்கீகாரம் வழங்கும் வகையில், அரசுப் பள்ளிகளில் ஆரம்பநிலையில் இருந்து ஆங்கிலவழிக் கல்வி என்ற அரசின் அறிவிப்பைப் பார்த்து வெம்பிக் கிடந்த வேளையில் திரு. ஜோகா சிங் அவர்களின் "மொழிச்சிக்கல்கள் குறித்த சர்வதேசக்கருத்துக்கள்" என்னும் ஆங்கில நூல் அஞ்சல் மூலம் எனக்குக் கிடைத்தது; படித்துப் பார்த்தேன்.

சர்வதேச மொழி ஆய்வுகளிலிருந்து பல்வேறு ஆய்வறிக்கை களை எடுத்துரைத்து, அதன் மூலம் அறிவு வளர்ச்சிக்கும், வாழ்வின் வெற்றிக்கும் தாய்மொழிக் கல்வியே உகந்தது - சிறந்தது என்பதைப் பேராசிரியர் மெய்ப்பித்துக் காட்டுகிறார்.

இந்திய அரசில் சட்டப்பிரிவுகள், ஒவ்வொரு இந்தியனுக்கும் தாய்மொழி மூலம் கற்பதற்கான உரிமைகளை வழங்குகின்றது. ஆனால், அரசின் கொள்கை வகுப்பாளர்களின் போலித்தனத் தாலும், அறியாமையாலும் மொழிக்கொள்கை குழப்பப்பட்டு தாய்மொழியின் அழிவிற்கு அடித்தளம் அமைக்கின்றன. எனவே, தாய்மொழியை நேசிப்பவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர்களை ஒருங்கிணைத்து, தாய்மொழி சிதைந்துவிடாமல்

காக்கும் உணர்வோடு இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. சிரத்தையுடன் இதைத் தமிழாக்கம் செய்த திரு. கண.குறிஞ்சி அவர்களும், வெளியிட்டுள்ள புதுமலர் பதிப்பகமும் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியவர்கள் ஆவர். இந்நூலைப் படிப்போர் அனைவரும் படிப்பதோடு நின்று விடாமல், இதை விதைப்போராக - வினை முடிப்போராகச் செய லாற்றுவோம்.

செப்டம்பர் 1, 2013
ஈரோடு

- அ. கணேசமூர்த்தி
மாவட்டச் செயலாளர்
ஈரோடு மாவட்ட ம.தி.மு.க

❍ இந்திய அரசின் செய்தித் தொழில்நுட்ப நிலைக்குழு உறுப்பினர்

❍ விவசாயம், நுகர்வோர் பிரச்சனைகள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கலந்தாய்வுக்குழு உறுப்பினர்.

இந்த நூலின் ஆங்கிலப் பதிப்பிற்கு வந்த சில எதிர்வினைகள்

*"**மொ**ழிச் சிக்கல்கள் குறித்த சர்வதேசக் கருத்துக்கள்"*

(கல்வி, அறிவு, அறிவியல் மற்றும் ஆங்கிலம் பயில்வதற்குத் தாய்மொழியே திறவுகோலாகும்) எனும் உங்களது ஆவணமும், அதன் இறுதியிலுள்ள பிரகடனமும் எடுத்துரைக்கும் உண்மைகள் மற்றும் வாதங்கள் ஆகியவற்றின் தீவிரத்தன்மையும், பொருத்தப்பாடும் என்னை அளவற்று ஈர்த்துள்ளது. எனவே, அதனால், இந்த ஆவணத்தை நான் எனது தாய்மொழியாகிய மைதிலியில் மொழியாக்கம் செய்துள்ளேன். மேலும் மேலும் வாசகர்களை இந்த ஆவணம் சென்றடையும்பொழுதுதான், இதனது நோக்கம் முழுமையடையும்."

*- **சம்புகுமார் சிங்**, கல்வி ஆலோசகர், தேசிய மொழிபெயர்ப்புக் குழு, இந்திய மொழிகளின் மைய நிறுவனம் (மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு) மைசூர்.*

ஃ ஃ ஃ

*"**இ**ந்தப் பொருள் குறித்த மிகவும் அறிவார்ந்த செயல் முறைக்கு நன்றி"*

*- **ஹர்பன்ஸ்லால்,**Ph.D., D.Litt (Hons), ஓய்வுபெற்ற பேராசிரியர் மற்றும் தலைவர், மருந்துப் பொருளியல் & நரம்பு அறிவியல், வடக்கு டெக்ஸாஸ் சுகாதார அறிவியல் மையம்.*

ஃ ஃ ஃ

*"**நு**ண்ணறிவுத்திறம் மிக்க உங்களது கட்டுரைப் படியொன்றை அனுப்பியமைக்கு நன்றி. உள்ளபடியே அதை நான் அனுபவித்துப் படித்தேன்."*

*- **முனைவர். தேஜ் கே. பாடியா**, பேராசிரியர், மொழியியல் & புலனுணர்வு அறிவியல், பல்கலைக்கழக வேந்தரின் தனிச்சிறப்பு வாய்ந்த மேன்மைமிகு பேராசிரியர், துறை ஆய்வாளர், சட்ட ஆய்வு அறிவியல், தேசியப் பாதுகாப்பு நிறுவனம், சைரிகுயூஸ் பல்கலைக்கழகம், சைரிகுயூஸ், நியூயார்க்.*

ஃ ஃ ஃ

“**இ**ரண்டு இளங்குழந்தைகளின் தாய் என்ற முறையில், இந்நூலைப் படிப்பது பெரும் தெளிவினைத் தருகிறது. இங்கு அபோட்ஸ்போர்டிலுள்ள தனியார் பஞ்சாபி பள்ளியில் எனது மகன்களைச் சேர்க்கத் திட்டமிட்டிருந்தேன். அவ்வாறு செய்தது ஒரு சரியான முடிவுதான் என்று இப்பொழுது நான் உணர்கிறேன்.”

- ***சரண்ஜித் கவுர் சாந்ரா,*** M.A.ஒருங்கிணைப்பாளர், இந்திய - கனடிய ஆய்வு மையம், பிராசர் வேலி பல்கலைக்கழகம்.

ஃ ஃ ஃ

“***க***ல்வி குறித்து, குறிப்பாக மொழிக்கல்வி குறித்து, தீவிரமான விவாதம் மகாராஷ்டிரத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அவ் வகையில் உங்களது கட்டுரை பெரும் தெளிவினை அளிக்கிறது. உலகம் முழுவதிலுமுள்ள மொழிக் கல்வி குறித்த விவரங்களையும், விவாதங்களையும் மிகவும் எளிய சொற்களில் நீங்கள் எடுத்துக் கூறியுள்ளீர்கள். எந்தவொரு பாமரனும் இவற்றைப் புரிந்து கொள்வான். கல்வியிலும், சமூக வெளியிலும் தீவிரமாக இயங்கி வரும் செயற்பாட்டாளர்களுக்கு இக்கட்டுரையை நான் அனுப்பி உள்ளேன்.”

- **குமாரி வினயா மாலதி ஹரி**, குழந்தைக் கல்வி மையம், பூனா.

ஃ ஃ ஃ

“***தா***ய்மொழியில் கற்பிப்பது குறித்த மேதைமிக்க தங்களது கட்டுரையை எனக்கு அனுப்பியதற்கு மிக்க நன்றி. ஆங்கில வழிக் கல்வி நிலையங்களுக்குத் தங்களது குழந்தைகளை அனுப்பும் தீராத நோய் போன்ற நாகரிகத்தால் உண்மையாகவே குழம்பியும், திகைத்தும் போயிருப்பவர்களுக்கு, உங்களது கட்டுரை மிகப் பெரும் தெளிவைத் தரக்கூடியதாகும்.”

- **மன்பிரசாத் சுப்பா, பிஜன் பாரி**, சாகித்ய அகாடமி பரிசுபெற்ற எழுத்தாளர், டார்ஜிலிங்.

ஃ ஃ ஃ

மொழிச்சிக்கல்கள்
குறித்த
சர்வதேசக் கருத்துக்கள்

(கல்வி, அறிவு, அறிவியல் மற்றும் ஆங்கிலம் கற்றலுக்குத் தாய்மொழியே திறவுகோல்)

(I) இந்த ஆவணம் எதற்காக?

மத்திய சிவில் பணிகளுக்கான தேர்வுகள் குறித்து இந்திய அரசு சென்ற மாதம் ஓர் அறிவிக்கை செய்தது. அதில் இத்தகைய தேர்வுகளில் இந்திய மொழிகளின் பங்கு குறித்துச் சில பிற்போக்கான அம்சங்கள் இருந்தன. திறமையை மதிப்பீடு செய்வதற்குக் கட்டாயத் தேர்வாகிய ஆங்கிலத்தில் பெறும் மதிப்பெண்களைச் சேர்த்து ஆங்கில மொழிக்குக் கூடுதல் அழுத்தம் தரும் பரிந்துரைகளும் அந்த அறிவிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தது. இது மொழி குறித்த விவாதத்தை மீண்டுமொருமுறை கிளப்பி விட்டுள்ளது. இந்திய அரசின் மேலே குறிப்பிட்ட மிகமோசமான அறியாமை மிக்க அறிவிக்கையின் விளைவாக எழுந்த சூழலுக்கு எதிர்வினையாகத்தான் இந்த ஆவணம் எழுதப்பட்டது.

மொழிவல்லுநர்களின் கடும் குற்றச்சாட்டு மற்றும் பல்வேறு அரசியல் அமைப்புக்களின் கடும் எதிர்ப்பு ஆகியவற்றின் விளைவாக (2013) மார்ச் 15 ஆம் நாள் மத்திய அரசு இந்த அறிவிக்கையைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. இந்திய மொழிகள் குறித்து இந்திய மேட்டுக்குடி மக்களின் வேறுபாடு காட்டும் மனநிலை, காலனிய எச்சங்களை விட மிகவும் மோசமானதாகும். மொழிச் சிக்கல் என்பது கல்வி, அறிவியல் வளர்ச்சி, பொதுவான அறிவு, பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மிக முக்கியமாக ஓர் அந்நிய மொழியை முறையாகக் கற்றுக் கொள்ளும் சிக்கலோடு, பிரிக்க முடியாத அளவு இணைக்கப்பட்டுள்ள ஒன்றாகும். இந்த ஆவணம் இத்தகைய விஷயங்கள் குறித்த முறையான சர்வதேசக் கருத்துக்களின் சுருக்கத்தைத் தரும் முயற்சியாகும்.

ஆங்கிலேயர்கள் வெளியேறிய பிறகும், இந்திய மொழிகளுக்கு, உரிய மற்றும் மிகவும் தேவையான கௌரவம் வழங்கப்படவில்லை என்பதோடு, கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அவைகளது நிலைமை மிக இழிவாகவும் மிகவேகமாகவும் மாறிக்

கொண்டிருக்கிறது. இந்திய மொழிகள், பள்ளிகளில் பயிற்று மொழியாகக் கூட இல்லாமல் ஆங்கில மொழியால் வெளியேற்றப் பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் இந்திய மேட்டுக் குடி மக்களின் தவறான, சுயநலமான போக்கு மட்டுமல்லாமல், கீழ்க்காணும் பொய்யான வாதங்களையும் இதற்கு ஆதரவாக அறிவுக்குப் பொருத்தமற்ற வகையில் இட்டுக்கட்டுகிறார்கள்.

1) ஆங்கில மொழி, அறிவியல் மற்றும் அறிவுக்கான மொழி. எனவே இத்தகைய துறைகளில் முன்னேற்றங் காண ஆங்கிலத் தேர்ச்சி என்பது தேவையானது.

2) ஆங்கில மொழி, சர்வதேசத் தொடர்பு மற்றும் வணிகத் திற்கான மொழி. எனவே ஆங்கில மொழி இல்லாமல், சர்வதேச வணிகத்திற்கு வாய்ப்பேயில்லை.

பொதுவாக, அறிவியல், கல்வி, அறிவு ஆகியவற்றிற்கும், மொழிக்குமான உறவு குறித்தும், சர்வதேச மொழி சார்ந்த நிலைமை குறித்தும் கொண்டுள்ள அறியாமையின் விளைவாகத் தான் மேற்குறிப்பிட்டது போன்ற வாதங்கள் முன்வைக்கப்படு கின்றன. இத்தகைய அறியாமை முகத்திரையை கிழித்தெறிவதுதான் இந்த ஆவணத்தின் நோக்கமாகும்.

(II) **தாய்மொழி - பிறமொழி-கல்வி**

தற்காலத்தில் மிக முக்கியக்கூறாகிய மொழிக்கும் கல்விக்கும் மேலும் பொதுவாக மொழிக்கும் அறிவியல் மற்றும் அறிவுக்கும் உள்ள உறவு குறித்துச் சர்வதேச அனுபவம் மற்றும் அறிவு குறித்து முதலில் பார்ப்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (UNESCO) 1953 ஆம் ஆண்டு பதிப்பித்த "கல்வியில் பிரதேச மொழி களின் பயன்பாடு" என்ற நூலில் சுட்டிக்காட்டப்படும் கருத்து நமக்கெல்லாம் தெளிவூட்டுவதாக அமையும். (இப்புத்தகம் இச்சிக்கல் குறித்து சர்வதேச ஆராய்ச்சி மற்றும் ஞானத்தின் சாரத்தை நமக்கு வழங்குகிறது.)

"ஒரு குழந்தைக்குப் பயிற்று மொழியாகத் தாய்மொழிதான் இருக்க முடியும் என்பது வெளிப்படையான உண்மையாகும். உளவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் புரிந்துகொள்வதற்கும், வெளிப்படுத்துவதற்கும், அறிவு இயல்பாகச் செயல்படுவதற்குரிய பொருள் மிக்க சமிக்ஞைகளைக் கொண்ட கட்டமைப்பாகத் தாய்மொழி உள்ளது. சமூகவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் தாம் சார்ந்துள்ள சமூகத்தில் உறுப்பினர்களிடையேயான அடை

யாளத்தை அறியும் வழியாகத் தாய்மொழி உள்ளது. கல்வியியல் கண்ணோட்டத்தில் பார்த்தால், அறிமுகமில்லாத மொழி வழியாகக் கற்பதை காட்டிலும், தாய்மொழி வழியாக மிகவும் விரைவாகக் கற்றுக் கொள்ள முடியும். (UNESCO 1953:11)

யுனெஸ்கோவின் இக்கருத்து, முழுமையான ஆய்வின் விளை வாகப் பெறப்பட்டதாகும். 1968 ஆம் ஆண்டு யுனெஸ்கோ இதையே மீண்டும் உறுதிப்படுத்தியது.

“.....தாய்மொழியைக் கல்வியில் எந்த அளவிற்கு நீட்டிக்க முடியுமோ, அந்த அளவிற்கு நீட்டித்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.”

ஐ.நா.வின் 2004 ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்டத்தில் கீழ்க்காணும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

“பிலிப்பைன்சு நாட்டில், இருமொழிக்கல்விக் கொள்கை யின்படி தகலாக் (TAGALOG) மொழியையும் ஆங்கில மொழியை யும் கற்றுத்தேறிய மாணவர்கள், தகலாக் மொழியை வீட்டில் பேசாத மாணவர்களைக் காட்டிலும் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றனர்.”(UNDP அறிக்கை -2004 : 61) ஆங்கிலத்தைத் தாய்மொழி யாக அதிக அளவில் பேசுகின்ற அமெரிக்காவைப் பற்றிய அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

“அமெரிக்காவில் தாய்மொழியாம் நவஜோ (NAVAJO) மொழி யை முதல் மொழியாகக் கொண்டு தொடக்கக்கல்வி முழுவதையும் கற்று, இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைக் கற்ற நவஜோ மாணவர்கள், ஆங்கில வழியில் மட்டுமே கல்விபயின்ற நவஜோ மாணவர்களைக் காட்டிலும் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றனர்” (UNDP அறிக்கை 2004 : 61)

ஆங்கிலத்தை மட்டுமே முக்கியமாகப் பேசும் அமெரிக்கா, கனடா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் எவ்வளவு பெரிய அளவிற்கு ஆங்கில வழிக் கல்வி அல்லாத பள்ளிகள் உள்ளன என்பதை அறிந்துகொள்ள இந்தியாவிலுள்ள ஆங்கிலதாசர்கள் சிரமம் மேற்கொள்ள வேண்டும் எனத் தனிப்பட்ட முறையிலும், கரிசனத்துடனும் நான் வேண்டுகிறேன். உலகம் முழுவதும் இப் பிரச்சனை குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்த அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

“மெக்சிகோவில் மொடியானோ (MODIANO) (1968,1973) என்பவரது ஆய்வறிக்கை முடிவுகள்; பின்லாந்தில் ஸ்கட்நேப் கன்கேஸ் (SKUTNABB-KANGAS) என்பவரது ஆய்வறிக்கை ; பெரும்

பாலான குழந்தைகள் தம் தாய்மொழியிலேயே கல்வி பயின்று பின்னாளில் இரண்டாவது மொழியோடு தம்மை இணைத்துக் கொள்ளும் இலத்தீன் அமெரிக்கா குறித்த வெவ்வேறான ஆய்வறிக் கைளைத் தொகுத்த குட்ஸ்சின்ஸ்கை (GUDSCHINSKY-1975)யின் அறிக்கை ஆகியன ஓர் உண்மையைத் தெளிவாக்குகின்றன. அதா வது தாய்மொழியில் பயிலும் மாணவர்கள் தம் சொந்த மொழியில் நன்கு தேர்ச்சி பெறுவதோடு, கல்வியின் உள்ளடக்கத் தேர்ச்சியில் உயர் சிகரங்களை எட்டி, இரண்டாம் மொழியிலும் நன்கு தேர்ச்சி பெறுகின்றனர். இரண்டாம் மொழியில் (அந்நிய மொழியில்-மொழிபெயர்ப்பாளர்) மட்டுமே பயிலும் குழந்தைகளைக் காட்டி லும் இவர்கள் பள்ளியில் நீண்டகாலம் நீடித்திருக்கின்றனர். (டக்கர், 1977:3) படிக்க "இரண்டாம்மொழியாக அந்நியமொழி")

ஸ்வீடன் நாட்டிற்குப் புலம் பெயர்ந்த பின்லாந்துக் குழந்தைகள் பற்றிய ஆய்வறிக்கையிலிருந்து கீழ்க்காணும் மேற்கோள் தரப்படுகிறது.

"பின்னிஷ் மொழித் திறன், கணிதத்தில் பெறக்கூடிய தேர்ச்சி யோடு நெருக்கமாகத் தொடர்புடையது எனத் தேர்வு முடிவுகளி லிருந்து கண்டறியப்பட்டது. கணிதப்பாடம் ஸ்வீடிஷ் மொழியில் கற்பிக்கப்பட்டாலும்கூட, மேல் வகுப்புகளில் கணிதத்தில் சாதனை புரிய பின்னிஷ் மொழிதான் ஸ்வீடிஷ் மொழியைக் காட்டிலும் முக்கியமானது என்பது புலனாகியது. கணிதத்தோடு தொடர்பு டைய கருத்தியல் செயல்பாடுகளில் தேர்ச்சித்திறன் பெற, சுருக்க மான தாய்மொழி அறிவு மிகவும் முக்கியம் என்னும் கருத்தாக் கத்திற்கு, இத்தகைய சோதனை முடிவுகள் வலிமை சேர்ப்பதாக உள்ளது. உயிரியல், வேதியியல் மற்றும் இயற்பியல் போன்ற பாடங்களிலும் கருத்தியல் சிந்தனை தேவையாக உள்ளது. இத்தகைய பாடங்களில் (தாய்மொழியை நன்கு அறியாத குழந்தை களைவிட) தாய்மொழியில் திறன் மிக்க புலம்பெயர்ந்த குழந்தை கள் குறிப்பிடத்தக்க வகையில் வெற்றி பெற்றுள்ளனர்."

(ஸ்கட்நேப் கன்கேஸ் மற்றும் டொக்கோமா, 1976) (பால்ஸடனிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டது, 1977 : 94)

அமெரிக்கா குறித்து இன்னொரு அறிக்கையையும் காண்போம்.

"ஆங்கிலம் மட்டுமே மேலோங்கியுள்ள கல்விமுறையில், தங்களது தாய்மொழி வளர்ச்சிக்கு எத்தகைய கவனமும் செலுத்தப்படுவதில்லை என்பதை அமெரிக்காவிலேயே தங்கியுள்ள,

ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொள்ளாத மக்களிடையில் படிப்படியான விழிப்புணர்ச்சி உருவாகிவருகிறது." (டக்கர், 1977:3)

கானா நாட்டைப் பற்றிய ஓர் ஆய்வு இதோ இங்கே -

"கானா நாட்டில் ஐந்து விழுக்காடு குழந்தைகள் மட்டுமே தொடக்கப்பள்ளியிலிருந்து உயர்நிலை பள்ளிக்குச் செல்வதாக பொக்கம்லா மற்றும் டுலோ (1977:45) ஆகியோர் பதிவு செய்கின்றனர்.

சைரீ பகுதியில் தொடக்கப்பள்ளியில் நுழையும் குழந்தைகளில் 30 விழுக்காடு குழந்தைகள் மட்டுமே முதல் நான்கு வகுப்புகளை நிறைவு செய்கின்றனர். பயிற்றுமொழியில் போதிய திறமை இல்லாததே இதற்குக் காரணம் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்." (பாசோல்டு, 1984:306)

மேலும், "ஆங்கிலம் தெரியாவிட்டால், அறிவியலையும், கணிதத்தையும் மாணவர்கள் படிக்க மாட்டார்கள் என்பது உண்மையல்ல. அறிவியல் கருத்துக்கள், ஒருமொழி, ஒரு கலாச்சாரத்திற்குள் அடங்குபவை அல்ல. ஆங்கிலத்தைப் பயன்படுத்தாமலே அற்புதமான அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்துள்ளதாக இரசியர்களும், ஜெர்மானியர்களும், பிரெஞ்சுக்காரர்களும் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். 2003 ஆம் ஆண்டில் 'சர்வதேசக் கணிதம் மற்றும் அறிவியல் ஆய்வின் போக்குகள்' எனும் போட்டியில் முதல் ஐந்து அரிய இடங்களைப் பெற்ற சிங்கப்பூர், கொரியக் குடியரசு, ஹாங்காங், சீனாவின் தைய்பெய் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் ஆங்கிலம் ஒரு முதல் மொழி அல்ல." (ரிகார்டோ மற்றும் நோலாஸ்கோ, 2009:6)

பண்டைய இந்தியாவும், அரபு உலகும் அறிவுத்துறையில்ஆங்கிலம் இல்லாமலேயே பெருமை கொள்ளத்தக்க இடத்தில் இருந்ததை நாம் அனைவரும் அறிவோம். இன்னும் சொல்லப் போனால், அந்த சமயத்தில் ஆங்கிலம் எனும் மொழியே பிறக்கவில்லை.

நார்வே நாட்டின் சர்வதேசக் கண்காணிப்பு அறிக்கை (பென்சன் 2005) குறிப்பிடுவதாவது -

"முழுமையான ஆறு ஆண்டுத் தொடக்கக்கல்வி, தாய் மொழியிலும், இரண்டாம் மொழியைத் தனியே ஒரு பாடமாகவும் கொண்டிருப்பது, நடைமுறைக்கு ஏற்றதாக இருப்பது மட்டுமின்றி, அனைத்துப் பாடங்களையும் ஆங்கிலத்திலேயே கற்பதைக் காட்டிலும் சிறந்த தேர்ச்சியைத் தந்துள்ளதாக "ஆறு ஆண்டு

யோரூபா தொடக்கத் திட்டம் ஐயத்திற்கிடமின்றி காண்பித் துள்ளது. (பாபன்வா மற்றும் பிறர் 1975; அகினாசோ 1993; பார்வைக்காக பிறவற்றைக் காண்க அடஜ்பியா 2003)

"மேலதிகமான அண்மைக்கால ஆய்வுகள், இந்தக் கண்டுபிடிப்புக்களையே உறுதி செய்கின்றன. இதற்கு மேலும் சென்று தாய்மொழி அடிப்படையில் மேலே பட்டியலிட்ட இருமொழித் திட்டத்தின் ஆக்கவழியிலான கூறுகளை ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. (பென்சான் 2005) (தாய்மொழி அடிப் படையிலான இருமொழிக்கல்வி என்பது தாய் மொழி வழியாகக் கல்வி வழங்குதலையும், அந்நிய / இரண்டாம் மொழியை ஒரு பாடமாகக் கற்பிப்பதையும் குறிக்கும்.)

இவ்வாறு, தாய்மொழி வழியாகக் கல்வி பயின்று கல்வியில் வெற்றியடைவதைவிட, அந்நிய மொழியில் பயின்று வெற்றி யடைந்துவிட முடியாது என்பது உலகம் முழுவதும் மீண்டும் மீண்டும் மெய்ப்பித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே தாய்மொழிவழிக் கல்விதான் வெற்றிகரமான கல்வியை வழங்க முடியும் எனக் கூறினால், அது தவறாகாது. கீழ்க்காணும் அறிக்கை இதற்கான சில காரணங்களையும் குறிப்பிடுகிறது.

"தவறுகள் நேர்ந்துவிடும் என்ற அச்சம் இல்லாத காரணத் தால், தனது சொந்தமொழியில் தன்னை எளிதாக ஒரு குழந்தை யால் வெளிப்படுத்திக் கொள்ள முடிகிறது. பன்மொழிக் கல்வி, (தாய்மொழிக் கல்வி, பயிற்று மொழியாகவும், பிறமொழி ஒரு பாடமாகவும் கற்றுத் தரப்படும் கல்விமுறை) கல்விபயில்வதில் குழந்தைகளின் செயல்திறன்மிக்க பங்களிப்பை ஊக்குவிக்கிறது. ஏனெனில் என்ன விவாதிக்கப்படுகிறது, அவர்களிடம் என்ன கேட்கப்படுகிறது என்பதைக் குழந்தைகள் புரிந்து கொள்கிறார்கள். உடனடியாக அவர்கள் தாய்மொழியைப் பயன்படுத்தி அவர்களது உலகத்தை உருவாக்கி, அதை விளக்குகின்றனர். மேலும், அவர் களது எண்ணங்களை எளிதாக வெளிப்படுத்தி, அவர்களுக்கு முன்பே தெரிந்திருப்பவையோடு புதிய கருத்துக்களைச் சேர்க்கின் றனர். பன்மொழிக் கல்வி, ஆசிரியர்களுக்கும் கூடுதல் வலிமையை அளிக்கிறது. அதிலும் குறிப்பாக, பரவலான செய்தித் தொடர்புக் கான மொழிகளைக் காட்டிலும், உள்ளூர் மொழியில் மிக எளிதாகவும் திறமையோடும் அவர்களால் பேச முடியும். மாணவர் கள் தங்களை நன்கு வெளிப்படுத்திக் கொள்வதால், அவர்கள் எதைக் கற்றுக் கொண்டார்கள் என்பதையும், எந்தெந்தப் பகுதியில் அவர்களுக்கு வழிகாட்டுதல் தேவைப்படுகிறது என்பதையும் மிகத்

துல்லியமாக ஆசிரியர்களால் மதிப்பிடமுடிகிறது. வாழ்க்கை மற்றும் அதன் பொருள் பற்றிய அறிவாகிய சமூக அறிவையும், பள்ளிக் கல்வியையும் இணைக்கக்கூடிய நிலையைப் பன்மொழிக் கல்வி உருவாக்குகிறது. தன் பண்பாட்டிற்குப் பொருத்தமான படிப்புச் சாதனங்களையும், கற்றல் உபகரணங்களையும் பன்மொழிக் கல்வி, சமூகத்திற்கு வழங்குவதோடு உள்ளூர் எழுத்தாளர்களையும், விளக்கவுரையாளர்களையும் கலாச்சாரக் குழுக்களையும் மற்றும் சமூகத்தின்பால் மிகுந்த அக்கறை கொண்டோரையும் உருவாக்கும் சூழலை ஏற்படுத்துகிறது.

பள்ளியின் மற்றும் சமூகத்தின் மொழி தங்களின் சொந்த மொழியாக இருப்பதால், தம் குழந்தைகளின் கல்வி குறித்துத் தீவிர கவனங் கொள்ளுமளவுக்குப் பன்மொழிக் கல்வி, பெற்றோருக்கு உரிமையளிக்கிறது. பள்ளியோடும் அதன் திட்டங்களோடும் சமூகம் நெருங்கி வரப் பன்மொழித் திட்டம் உதவுகிறது." (ரிகார்டோ மற்றும் நோலாஸ்கோ, 2009:4)

குழந்தையின் தாய்மொழி பயிற்றுமொழியாக இல்லா விட்டால், வேற்று மொழியைப் பயிலக் குழந்தை பல ஆண்டுகளை வீணாக்க நேரிடுகிறது எனக் கல்வி மற்றும் மொழியியல் நிபுணர்கள் கருத்துக் கூறுகின்றனர். ஏனெனில் இந்த வகையில், அறிவியல், கணிதம், கல்வி பயில மிகவும் அடிப்படையாகவுள்ள படிப்பறிவு ஆகியவற்றை விடுத்து, இளம் படிப்பாளிகளும் அவர் களது ஆசிரியர்களும் வேற்றுமொழிக்காக அதிகக்கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அடிப்படை அறிவியல், கணிதம், சிக்கல்களைச் சமாளிக்கும் திறன், தர்க்கத் திறமைகள் ஆகியவற்றைக் கற்கத் தாய்மொழிக் கல்விதான் மிகச் சிறந்த வழியாகும்" (ரிகார்டோ மற்றும் நோலாஸ்கோ, 2009:11)

தாய்மொழி மூலம் கற்கும் பொழுது மட்டுமே கல்வியில் வெற்றி பெற இயலும் எனும் உறுதியான சான்றை உலகந்தழுவிய ஆய்வும், நிபணர்களின் கருத்தும் நமக்குத் தெளிவாக்குகிறது என்பதை மேலே கண்டோம். ஆனால் இங்கு இந்தியாவில் மொழி மற்றும் கல்விக் கொள்கைகளைத் தீர்மானிக்கும் குழு, ஆங்கிலத்தை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதோடு, தங்களது கண்களையும், காதுகளையும் இறுக்க மூடிக்கொண் டிருக்கிறார்கள். இந்தியாவின் கல்வி, மொழி மற்றும் பண் பாட்டை மீளமுடியாத அளவுக்குச் சீரழித்துக் கொண்டிருக்கி றார்கள். அவர்கள் கண்களை மறைத்துக் கொண்டிருக்கும் திரை யையும், காதுகளை அடைத்துக்

கொண்டிருக்கும் மெழுகுச் சக்கையையும் போக்குவதே முன்பே குறிப்பிட்டதுபோல், இந்தக் குறிப்புரையின் பணிவான நோக்கமாகும்.

கீழே விவரிக்கப்படும் சர்வதேச ஆய்வு முடிவுகள் இத்தகைய கோழைத்தனமான அறியாமையை மேலும் கிழித்தெறிய உதவும். தாய்மொழி வழிக்கல்வி, கல்வியில் வெற்றி பெறுவதற்கு மிகவும் அவசியம் என்பதை மட்டுமல்ல, வேறோர் அந்நிய மொழியைப் பயில்வதற்கும்கூட அந்நிய மொழி வழிக்கல்வியை விடச் சிறந்தது என்பதையும் இத்தகைய முடிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

(III) அந்நியமொழி கற்றல்/தாய்மொழி வழிக்கல்வி ஆகியவற்றுக்கு எதிராக அந்நிய மொழி வழிக்கல்வி

ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவனத்தின் (UNESCO) ஓர் அறிவிக்கையிலிருந்து தொடங்குவது பொருத்தமாக இருக்கும்.

“மொழி மற்றும் கற்றல் குறித்து மாயைகளின் தொகுப்பு ஒன்று நம் வழியை இடைமறித்துக் கொண்டு நிற்பது போல் தோன்றுகிறது. இத்தகைய மாயைகளின் திரைகளை விலக்கி, மக்களின் கண்களைத் திறக்க வேண்டும். அந்நிய மொழி ஒன்றைக் கற்பதற்குச் சிறந்தவழி, அதே அந்நிய மொழியைப் பயிற்சி மொழியாகப் பயன்படுத்துவதுதான் என்பது அத்தகைய மாயைகளின் ஒன்றாகும். (மேலும் கூடுதலான மொழிகளைக் கற்க, அவற்றைப் பாடமாகப் பயில்வது தான் உண்மையாகவே இன்னுங்கூடப் பயனுடையதாக இருக்கும்.) அந்நிய மொழியைப் பயில அதை முன்னதாகவே கற்கத் தொடங்கிவிடவேண்டும் என்பது இன்னொரு மாயை. (முன்னதாகவே கற்கத் தொடங்குவது நேர்த்தியான உச்சரிப்பைப் பெறப் பயில்வோருக்கு உதவும். ஆனால், அதற்கு மாறாக, ஏற்கனவே தாய்மொழியில் ஆளுமை பெற்ற கற்றறிந்தோருக்கே இந்தப் பயன் போய்ச் சேரும்) மூன்றாவது மாயை என்னவென்றால், அந்நிய மொழியைக் கற்பதற்குத் தாய்மொழி ஒரு தடையாக இருக்கும் என்பதாகும். (ஆனால், தாய்மொழியில் வலிமையான அடித்தளத்தைக் கட்டியமைப்பதே கூடுதல் மொழிகளைக் கற்க ஏதுவாக இருக்கும்.) தெளிவாகக் கூறினால், இத்தகைய மாயைகள் உண்மை என்பதைவிடப் பொய் என்றே குறிப்பிடலாம். இருப்பினும், மேலாதிக்கம் பெற்றுள்ள அல்லது அலுவல் மொழிகளைப் பயிலப் பிறமொழிகளைப் பேசுபவர்களுக்கு இதுதான் வழி என, அரசு கொள்கை வகுப்பவர்களை இது

எண்ணத் தூண்டுகிறது.” (யுனெஸ்கோ, 2008:12)

உலகிலுள்ள எல்லாக்கண்டங்களிலும் பரவலாக விரவிக் கிடக்கும் 12 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்தான் இந்த அறிவிப்புக்கு அடிப்படையாகும். இந்த ஆய்வு இந்தியாவையும் உள்ளடக்கியுள்ளது. மேலும், ஆங்கில மொழியின் எதிரியாக இல்லாத உலக வங்கிதான் இதற்கு நிதிஉதவி செய்துள்ளது.

ஸ்வீடன் நாட்டிற்குப் புலம் பெயர்ந்த பின்லாந்து குழந்தைகள் குறித்தும் இதேபோன்றதோர் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

“மிகப்பெரிய அளவில் பார்த்தால், பின்னிஷ் மொழியை எந்த அளவு ஒரு மாணவன் சிறப்பாக அறிந்திருக்கிறானோ (அதாவது பின்லாந்தில் பல ஆண்டுகள் பள்ளிக்குச் சென்றிருக்க வேண்டும்.) அந்த அளவு ஸ்வீடன் மொழியையும் அவன் கற்றுக் கொண்டிருக்கிறான். சராசரியாகப் 10 வயதில் பின்லாந்திலிருந்து இடம் பெயர்ந்த குழந்தைகள், பெரும்பாலும் தேவையான பின்னிஷ் மொழியறிவு மட்டத்தை அழியாது பாதுகாத்து வைத்திருக் கின்றனர். அதேபோல் ஸ்வீடிஷ் மாணவர்களைப் போலவே, ஸ்வீடிஷ் மொழியிலும் தேவையான அளவு தேர்ச்சி அடைந்து விடுகிறார்கள். ஆறு வயதிற்குள் இடம்பெயர்ந்த குழந்தைகளோ அல்லது ஸ்வீடனில் பிறந்த குழந்தைகளோ சிறப்பாகச் செயல்படுவதில்லை. தாய்மொழியில் போதுமான அடிப்படை இல்லாத காரணத்தால், இவர்களது ஸ்வீடிஷ் மொழி வளர்ச்சி பெரும்பாலும் பன்னிரண்டு வயதில் நின்றுவிடுவது வெளிப்படை யாகத் தெரிகிறது.” (பால் ஸ்டான், 1977:92-3)

எனவே, தாய்மொழி வழியாகப் பயிலும் பொழுது, அந்நிய மொழிகளைச் சிறந்த முறையில் கற்றுக் கொள்ள முடியும் என்பது தெளிவு. ஏன் இது இவ்வாறு உள்ளது என்பதைக் கீழ்க்கண்டவை நமக்குச் சொல்லும் -

“அந்நிய மொழியைக் கற்பதிலும், கற்பிப்பதிலும் தாய்மொழி யின் முக்கிய அடிப்படையை நாம் மறுவரையறை செய்யவேண்டி யுள்ளது என்பதை புட்ஸ்காம் வலியுறுத்துகிறார். குழந்தைகள் அவர்களது தாய்மொழியின் ஊடாக வளரும் பொழுது,

1) அவர்களது உலகைக் கருத்துமயமாக்க, அவர்கள் கற்றுக் கொள்கின்றனர். மேலும், மொழியின் குறியீட்டுச் செயலை அவர்கள் முழுமையாக உள்வாங்கிக் கொள்கின்றனர்.

2) எண்ணங்களை வெளிப்படுத்த அவர்கள் கற்றுக்

கொள்கின்றனர்.

3) குரலைப் பயன்படுத்தவும், பேசவும் அவர்கள் கற்றுக் கொள்கின்றனர்.

4) இலக்கணம் பற்றி உள்ளுணர்வு சார்ந்த புரிதலை அவர்கள் பெறுகின்றனர். மேலும் மொழியின் பல்வேறு நுண்மையான விவரங்களைப் பற்றிய விழிப்புணர்வையும் பெறுகின்றனர்.

5) படித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய துணைத் திறன்களையும் அவர்கள் பெறுகின்றனர்.

எனவே, அந்நிய மொழியைக் கற்கும் நோக்கத்திற்குப் பெரும் சொத்தாக மக்கள் கொண்டு வருவது தாய்மொழியே ஆகும். தங்கு தடையற்ற மொழி ஆதரவு அமைப்பை (Language Acquisition Support System) தவிர்க்க முடியாமல் அது வழங்குவதோடு, அறிவூட்டலை முதன்மையாகச் சாத்தியப்படுத்துகிறது." (விக்கிபீடியா)

"தாய்மொழி மூலமாக முன்பே சேகரிக்கப்பட்ட பெருமளவிலான மொழித்திறன்கள் மற்றும் உலக அறிவு எனும் இரண்டையும் கற்போர் வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இவர்கள் புதியதோர் மொழியில் தங்களது உலகை மறு கருத்துருவாக்கம் செய்ய வேண்டிய தேவை பெரும்பாலும் இல்லை. தாய்மொழியோடு உடன் வருகிற உரையாடல் திறனையும், உலகியல் அறிவினையும் அவர்கள் தாய்மொழிப் பாடத்தின் ஊடே கற்றுக் கொண்டுள்ளனர். இவ்விரண்டு கூறுகளும் மொழித் திட்டத்தோடு இணைய நேரடியாகத் தயாராகவுள்ளது. எடுத்துக்காட்டாக, வேண்டுகோள்கள், விருப்பங்கள் அல்லது எச்சரிக்கைகள் ஆகியவை அறிக்கைகளைப்போல அணிவகுக்கும் என்பதை அவர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. இரண்டு மொழிகளும் ஒரே வகையான இலக்கண அம்சங்களைக் கொண் டுள்ளன எனும் உண்மையைச் சார்ந்ததாக வலிமையான தாய்மொழிக் கல்வியின் இலக்கணம் இருக்கவில்லை. இது ஏனென்றால், உடைமை, எண், இயக்கும் ஆற்றல், கருவி, மறுதலித்தல், காரணம், நிலைமை, கடப்பாடு போன்ற அருவமான கருத்துக்களை வெளிப்படுத்தும் வழிகளை எல்லா மொழிகளும் உருவாக்கி வைத்துள்ளன. அம்மொழிகள் இவற்றை எவ்வாறு செய்கின்றன என்பது முக்கியமல்ல. ஓர் இயல்பான மொழியே பிறமொழிகளின் இலக்கணக் கதவுகளைத் திறக்கப் போதுமான தாக இருக்கிறது. ஏனெனில் எல்லா மொழிகளும் ஒரே கருத்தியல் துணியிலிருந்து வெட்டப்பட்டவைதான்.

ஆழமாகப் பார்த்தால், மொழியை ஒரேமுறை மட்டுமே நாம் கற்கிறோம் http:// en.wikipedia.org/wiki/Wolfgang_Butzkamm

இந்தியக் கொள்கைகளை உருவாக்குபவர்களது கண்களி லுள்ள திரைகளை விலக்கவும், அவர்களது செவிகளிலுள்ள பெரும் சக்கைகளை இழுத்தெறியவும் இதுவரை விவரிக்கப்பட்ட உண்மைகளே உறுதியாகப் போதும். இருப்பினும், பிற உலகமொழிகளில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைக் காண்பது தவறல்ல.

உள்ளபடியே ஆங்கிலம் எங்கெல்லாம் பயிற்சி மொழியாக உள்ளதோ, அங்கு அது அந்நிய மொழியாக இருப்பினும்கூட, அது அங்கிருந்து நீக்கப்பட்டுள்ளது அல்லது நாள்தோறும் அது அங்கிருந்து மறைந்து வருகிறது. சில எடுத்துக்காட்டுகளே ஆதாரத்திற்குப் போதுமானது.

உகாண்டா:

தொடக்கத்தில் முதல் மூன்று ஆண்டுகள் தாய்மொழிகளே கட்டாயம் பயிற்சி மொழியாகப் பயன்படுத்தப்படவேண்டும் எனவும், ஒரு மொழிப்பாடமாக மட்டுமே ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும் எனவும், 2007 ஆம் ஆண்டிலேயே தீர்மானிக்கப் பட்டது. இந்த ஏற்பாடு, அவர்களுக்கு வெற்றியையும் அளித்தது. இப்புதிய கொள்கை, எழுத்தறிவில் முன்னேற்றத்தைத் தந்தது என்பதை 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற மதிப்பீடு காட்டியது.

உகாண்டா நாட்டில் 52 மொழிக் குழுக்கள் உள்ளன என்பதை இவ்விடத்தில் குறிப்பாகச் சுட்டிக் காட்டவேண்டும். தாய்மொழியில் ஒரு மாணவனுக்கு நல்ல அடித்தளம் இருக்கு மானால், அந்நிய மொழியை அவன் நல்லமுறையில் கற்றுக் கொள்ள முடியும் என்னும் எண்ணம்தான் உகாண்டாவின் மாற்றத்திற்கு அடிப்படையாக இருந்தது. ஆனால், இந்தப்புதிய கொள்கைக்கு முன்னால், ஆங்கில வழிக்கல்விதான் தொடக்கத்தி லிருந்தே உகாண்டாவில் பள்ளிக் கல்வியின் பயன்பாட்டில் இருந்து வந்தது.

(இத்தகைய உண்மைகளுக்குப் பார்க்க - கவுமா 2009)

மலேசியா:

தேசியப் பள்ளிகளில் கணிதத்தையும், அறிவியலையும் கற்பிக்க பாஷா மலேசியா மொழியும், உள்ளூர்ப் பள்ளிகளில் தமிழையும் சீனமொழியையும் பயன்படுத்துவது என 2009-ல் தீர்மா னிக்கப்பட்டது. தமிழர்களுக்கு அறிவியலைத் தமிழில் கற்பிப்பது சரியானது என மலேசியா கண்டறிந்துள்ள நிலையில் இங்கு

இந்தியாவில் அது அநேகமாக ஒரு குற்றமாகவே கருதப்படுகிறது. இந்தியாவில் கொள்கை வகுப்பவர்களின் அறியாமைக்கு இதைவிடச் சிறந்த விமர்சனம் வேறொன்று இருக்க முடியாது. "ஞானம் இல்லாவிட்டால், கிணறுகளும் கூட வற்றிவிடும்." எனப் பஞ்சாபி மொழியில் ஒரு பழமொழி உண்டு. நமக்கு அது குறித்து அதிகமாகத் தெரியாது. ஆனால் ஆங்கில நோய்வாய்ப்பட்ட இந்திய மூளைகள் உறுதியாக வெற்றிடமாகிவிட்டன.

இருப்பினும், இன்னும் சில ஆதாரங்களை இங்கே காண்பது யாருக்கும் எவ்விதக் கெடுதலையும் தராது.

நியூசிலாந்து மற்றும் பிரிட்டன்:

இவ்விரு நாடுகளும் அண்மைக்க காலத்தில் அங்குள்ள உள்ளூர்க் குடிமக்களின் சிறுபான்மை மொழிகள் மீது மிகுந்த மதிப்பை வெளிப்படுத்துகின்றன (குடியேறிய மொழிகளுக்கு அத் தகைய மதிப்பு இல்லாவிட்டாலும்கூட) வேலை வாய்ப்பிலுங்கூட, பள்ளியில் படித்த பயிற்சி மொழியைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். மோரி (MAORI) மொழி மற்றும் பண்பாடு குறித்த நியூசிலாந்தின் கொள்கை பற்றிய அண்மை வரலாறு நம்பிக்கை யூட்டும் கண்ணோட்டத்தோடு எஸ்.மே. அவர்களால் விளக்கமாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. (PP. 21-_41) மோரி மொழி வழியி லான புதிதாக நிறுவனமயமாக்கப்பட்ட மோரி தொடக்கப் பள்ளிகள் (குரா காபாபா) குறித்த தொடக்கநிலை மதிப்பீடுகள், குழந்தைகளின் கல்விமேம்பாடு போன்றவை மைய நீரோட்ட உயர்குடிக் குழந்தைகளோடு ஒப்பிடத்தக்க வண்ணம் உள்ளது. அதே சமயம் இரண்டு மொழித் தேர்ச்சி எனும் கூடுதல் நன்மை யையும் இது வழங்குகிறது. " (பக்.35)

ஹாங்காங்:

ஹாங்காங்கில், புன்டான்காவின் (PUNTONGHUA) பயன் பாட்டில் வளர்ச்சி இருப்பதோடு, பரவலாகக் கற்பிக்கப்படும் பள்ளிப் பாடமாகவும் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் உள்ளூர் கன்டோனீசு (CANTONESE) மொழி ஆங்கிலத் தோடு சேர்ந்து பயிற்சி மொழியாகப் பயன்படுகிறது.

மலேசியா:

இதற்கு மாறாக, மலேசியா, ஆங்கிலத்தின் செல்வாக்கை யையும், பங்கு பணியையும் குறைத்திருப்பதோடு, அந்நாட்டின் ஒரே அலுவல் மொழியாகவும், பொதுப்பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஒரே பயிற்சி மொழியாகவும் மலாய் (பாஷா

மலேசியா) மொழியை மாற்றியமைத்துள்ளது" (எஸ். கவுர்கில், 135-152) (@அமோன், 2004)

கடந்த பல ஆண்டுகளாக ஆங்கிலத்தால் பீடிக்கப்பட்ட எல்லா நாடுகளும், இவ்வாறு அதற்கு விடை கொடுத்து வருகின் றன என்பது இதிலிருந்து தெளிவாகும். எவரொருவரும் அறியாமை யின் நண்பராக இருக்க விரும்பவில்லை என்பதுதான் இதற்குக் காரணமாகத் தோன்றுகிறது. (அறிவு அடிமைத்தனத்திற்கும், போலித்தனத்திற்கும் அதிகளவில் பலியாகிவிட்ட இந்தியர்கள் இதற்கு விதிவிலக்கு)

பிறகு, இந்தியாவில் இது ஏன் நடைபெறுகிறது? இந்தியாவி லுள்ள புதிய மனுவாதிகள்தான் இதற்கு உண்மையான காரண மாவர். விரல்விட்டு எண்ணத்தக்க இந்திய மேட்டுக்குடி மக்கள், அனைவரையும் கொள்ளையடிக்க விரும்புகின்றனர். ஆங்கில மொழி எனும் கருவியின் மூலம் பிற இந்தியர்களிடமிருந்து அனைத்தையும் கவர்ந்து கொள்ள விரும்புகின்றனர். எனவே இந்தத் தொழில் நுட்பக் காலகட்டத்தில் இந்தியாவின் புதிய மனுவாதிகளை நீடித்து நிலைக்கச் செய்யும் தத்துவார்த்த அடித் தளங்களைத் தகர்த்து நொறுக்க வேண்டிய தேவை நமக்கு உள்ளது. இத்தகைய அடித்தளங்கள் என்பவை ஆதாரமற்ற புனை கதைகளேயாகும். இவற்றை (ஸ்வீடன்) ஸ்டாக்ஹோம் பல்கலைக் கழக அறிக்கை நளினமாகக் கிழித்தெறிகிறது. (பார்க்க, பென்சான், 2005) இவற்றில் சில புனைந்துரைகள் கீழே விவரிக்கப்பட் டுள்ளன.

மொழியைச் சூழ்ந்துள்ள மேலும்சில புனைந்துரைகள் -

"ஒரே நாடு; ஒரே மொழி எனும் புனைந்துரை. அனை வரையும் இணைக்கக்கூடிய ஒற்றை மொழி ஒரு நாட்டிற்குத் தேவை எனும் காலனியக் கருத்தியல், உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள கொள்கை வகுப்பாளர்களின் மீது செல்வாக்குச் செலுத்தி வருகிறது. இருப்பினும், "நடுநிலையானது" என்றழைக்கப் படும் ஓர் அந்நிய மொழியைத் திணித்ததால், தேவையான ஒற்றுமையை அது தரவில்லை. ஒப்பீட்டளவில் ஒற்றைமொழி யைப் பேசும் சோமாலியா, புருண்டி அல்லது ருவாண்டா போன்ற நாடுகளில் நிலையான ஆட்சியை அதனால் உத்தரவாதப்படுத்த முடியவில்லை. வங்காளதேசம், பாகிஸ்தான், மியன்மார் மற்றும் சிறீலங்கா போன்ற நாடுகளிலுள்ள மாறுபட்ட பலமொழிகளின் இருப்பை ஒப்புக் கொள்வதில், அரசு தோல்வி அடைந்ததுதான் உள்ளபடியே

மிகப்பெரிய நிலைகுலையச் செய்யும் சக்தியாக இருக்கிறது. (ஓயேன் 2003) @ (பென்சான், 2009)

நவீனக்கருத்தியலை உள்ளூர் மொழிகள் வெளிப்படுத்த இயலாது என்பது ஒரு புனைந்துரை. மற்ற மொழிகளோடு ஒப்பிடு கையில், ஐரோப்பிய மொழிகளின் புனைந்துரைக்கப்படும் உள் ளார்ந்த மதிப்பு என்பது பிறிதொரு காலனியக் கருத்தியலாகும். ஆனால், பேசுபவரது எண்ணங்களை வெளிப்படுத்தக்கூடிய வல்லமை எல்லா மனிதமொழிகளுக்கும் இணையாக உண்டு. அதே போல், தேவைப்படும் சொற்களையும் கட்டமைப்புகளையும் வளர்த்துக் கொள்ளும் வலுவும் அவைகளுக்கு உண்டு. செனகல் நாட்டின் வோலோப் எனும் கலப்பு மொழியில் ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவத்தை லியோ போல்டு செங்கோர் ஒருமுறை மொழியாக்கம் செய்து இந்த உண்மையை விளக்கிக் காட்டினார். “அறிவு மயமாக்கத்திற்கு” அல்லது வளர்ச்சிக்கு எவ்வகை மொழிகள் எழுதுவதற்கும் பதிப்பித்தலுக்கும் வரலாற்று ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன எனும் வேறுபாட்டில்தான் இது அமைந்துள்ளது. (அலெக்சாந்தர், 2003) @ (பென்சான், 2009)

எவ்வகையான கருத்தாக்கத்தையும் வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல், ஒவ்வொரு மொழிக்கும் உண்டு என்பதை மேலே குறிப் பிட்டுள்ள அறிக்கைகள் மிகவும் தெளிவாக்குகின்றன. ஆனாலும் இதுகுறித்த இப்படிப்பட்ட அறியாமை சுற்றிலும் நிலவுகிறது. எனவே, இதைப் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டிய தேவை நமக்கு உள்ளது.

வாக்கிய அமைப்பு உருவாக்கத்தில், எந்தவொரு மொழி யையும் செழுமைமிக்கது அல்லது ஏழ்மையானது என முத்திரை குத்தமுடியாது. எந்த இரண்டு மொழிகளின் இலக்கணப் புத்தகங் களை மேலோட்டமாகப் படித்தாலும், இந்த உண்மை புலனாகும். இன்னும் சொல்லப் போனால் இலக்கணப் புத்தகமே இல்லாத ஒருமொழி, எழுதப்பட்ட இலக்கணப் புத்தகங்களைக் கொண்ட மொழிகளைப் போலவே, இலக்கணச் செழுமைமிக்கதாகும். எனவே, வாக்கியக் கட்டமைப்பு ரீதியாக, எல்லா மொழிகளும் இணையான செழுமைமிக்கவையேயாகும். சொல்வளம்தான், ஒருமொழியின் செழுமை அல்லது ஏழ்மை பற்றிய தவறான கருத்துக்கு வேராக இருக்கிறது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் போதுமான சொற்களை நமது மொழிகள் கொண்டிருக்கவில்லை

என அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆனால், மொழிலுள்ள சொல்வளங் குறித்த முழுமையான அறியாமைதான் இந்தக் கண் ணோட்டத்திற்குக் காரணம். உள்ளபடியே, ஒவ்வொரு மொழிக் கும் ஒருவகைப்பட்ட சொல்வளம் இருக்கிறது. ஏனெனில் ‘வேர்ச் சொற்கள்’ மற்றும் ‘இணைப்புச் சொற்கள்’ என்றழைக்கப்படும் அடிப்படைக் கூறுகளிலிருந்துதான் ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களும் கட்டமைக்கப்படுகின்றன. இத்தகைய அடிப்படைக் கூறுகளில், எண்ணிக்கையில் மொழிகளுக்கிடையே குறிப்பிடத் தக்க வேறுபாடு ஏதும் இல்லை. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்கள் இதை வெகு எளிதாக விளக்கும்.

1) Haem --- ஹேம்–‘இரத்தம்’ பற்றிக் குறிப்பிடும் முன்னெழுத்து

2) Haemcyte --- ஹேமோசைட்– ஒரு இரத்த செல்.

3) Haemagogue --- ஹேமகாக்– மாதவிடாய் மற்றும் மூலநோய் காரணமாக நேரிடும் இரத்த ஒழுக்கினை மேம்படுத்தும் மருந்து.

4) Haemal --- ஹேமல்– இரத்தம் குறித்தது

5) Haemalopia --- ஹேமலோப்பியா– கண்ணிற்குள் பீறிடும் இரத்தம்– இரத்தம் தோய்ந்த கண்.

6) Haemngiectasis--- ஹேம்ஜியக்டாசிஸ்– இரத்தக்குழாய் விரிவாக்கம்.

7) Haemangioma --- ஹேமன்ஜியோமா– உடலின் எந்தப் பகுதியிலும் தோன்றும் இரத்தக் குழாயின் பொருத்தமில்லாத வீக்கம்.

8) Haemarthrosis --- ஹேமார்த்ராசிஸ்– இணைப்புத்துளை யில் இரத்தம் தோய்தல்

9) Haematemesis --- ஹேமட்டிமிசிஸ்– இரத்தவாந்தி

10) Haematin --- ஹேமடின் – ஹீமோகுளோபினிலுள்ள இரும்புச்சத்துகொண்ட பகுதி

11) Haematinic --- ஹேமடினிக் – இரத்தத் தகுதியை மேம்படுத்தும் ஒரு பொருள்.

12) Haematinuria --- ஹேமடிநூரியா– சிறுநீரில் ஹேமட்டின் காணப்படுதல்

13) Haematocele --- ஹேமடோசீலி- இரத்தம் நிரம்பிய வீக்கம்; ஹேமடோமா

14) Haematocolpos--- ஹேமடோகால்பாஸ்- பெண்களின் பிறப்புறுப்பில் பிறவியிலேயே அமைந்த தடைகாரணமாக உண்டாகும் மாதவிடாய்த் தேக்கம்

15) Haematogenesis--- ஹேமடோஜெனிசிஸ்- இரத்தம் மேம்படுதல்

16) Haematoid --- ஹேமடாய்டு- இரத்தம் மேம்படுதல், தோற்றம் மற்றும் இரத்தத் தன்மை

17) Haematology --- ஹேமடாலஜி- இரத்தத்தின் தோற்றம், கட்டமைப்புச் செயல்கள் மற்றும் நோய்கள் குறித்த அறிவியல்

18) Haematolysis --- ஹேமடாலிசிஸ்-இரத்த செல்களைச் சிதைத்து,ஹீமோகுளோபினை விடுவித்தல்.

19) Haematoma --- ஹேமடோமா- இரத்தக்கட்டி / புறஉறுப்புக்களில் தோன்றும் இரத்தக்கட்டி (ராவட்டிடமிருந்து நன்றி, 1985)

20) Haemopilia --- ஹேமோபிலியா- உறையாமலிருக்கும் இரத்தத் தன்மை

முன்பு குறிப்பிட்டவைகளுக்கு இணையான சொற்கள் நமது மொழிகளில் இல்லை என முதற்பார்வையில் நமக்குத் தோன்றக் கூடும். ஆனால் உண்மை என்னவென்றால் முன்பு குறிப்பிட்ட சொற்கள் அனைத்தும் இரத்தம் எனும் பொருள்படும் ஹேம் (Haem) எனும் வேர்ச் சொல்லோடு சில சொற்களைச் சேர்த்துப் பெறப்பட்டவையேயாகும். இந்தி மொழியிலும் (அல்லது எம்மொழியிலும்- மொழிபெயர்ப்பாளர்) இதற்கு இணையான சொற்கள் உள்ளன அல்லது வெகு எளிதில் அச்சொற்களை உருவாக்கலாம்.

[இதை விளக்க மூல ஆசிரியர், 20 இந்திச் சொற்களைக் குறிப்பிடுகிறார் - மொழிபெயர்ப்பாளர்]

எனவே, நமது மொழிகளில் சொல்வளம் இல்லை எனக் கூறுவது, விரிவான செய்திகளை அறியாமல் இருப்பதன் ஆழமான

சான்றாகும். மேலே குறிப்பிடப்பட்ட ஆங்கிலச் சொற்கள், வலிந்து புனையப்பட்ட ஆங்கில மொழிச் செழுமை குறித்த மற்றொரு குறிப்பிடத்தக்க உண்மையையும் வெளிப்படுத்துகிறது. மேலே குறிப்பிட்ட எந்தவொரு சொல்லும், ஆங்கிலச் சொல் அல்ல. அனைத்துச் சொற்களும் இலத்தீன் மொழியிலிருந்து நேரடியாகக் கடனாகப் பெறப்பட்டவையாகும். ஆங்கிலத்தில் தேர்ச்சி இருந்தால் தான் ஒருவர் அறிவியல் சொற்களைப் புரிந்து கொள்ள முடியும் எனும் நம்பிக்கை, இவ்வாறு ஒரு தவறான கருத்தாக்க மாகும். ஏனெனில், ஆங்கிலத்திலுள்ள பெருவாரியான அறிவியல் சொற்கள், இலத்தீன் அல்லது கிரேக்க மூலத்திலிருந்து பெறப் பட்டவையாகும்.

ஆங்கிலத்தேர்ச்சி உலகம் முழுவதற்குமான கதவுகளைத் திறக்கக் கூடியது எனும் கருத்தாக்கம்தான் குணமாக்க முடியாத இந்த ஆங்கில நோய்க்கூறுக்குக் காரணமான மற்றொரு புனைந்து ரையாகும். எனவே, உலகம் முழுவதும் மொழி சார்ந்து என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றறிவது மிகவும் முக்கியமானதாகும்.

“ஆங்கில மொழியே உலகமொழி எனும் மாயை- கல்வி, வேலை மற்றும் பிற வாய்ப்புக்களுக்கு அந்நிய ஆங்கில மொழியே தேவை என அடிக்கடி கருதப்படுகிறது. இருப்பினும் இக்கருத் தாக்கம், அரசியல் வெற்றிடத்தில் தோன்றவில்லை. இது வலிமை வாய்ந்த நாடுகள் அல்லது அந்தந்த மொழிகளிலுள்ள வலிமை வாய்ந்த குழுக்கள், வேண்டுமென்றே ஆங்கிலத்தை உயர்த்திப் பிடித்ததன் விளைவாக நேரிட்டுள்ளது என பிலிப்சான் (1992) சுட்டிக் காட்டுகிறார். இதற்கிடையே, குறைந்த வருவாயுள்ள நாடுகளில் முறைசாரா வேலை வாய்ப்புக்கள், ஐம்பது விழுக்காடு அல்லது அதற்கும் மேலான மக்களை ஈடுபடுத்தியுள்ளது. இது மென்மேலும் வளர்ந்துவருகிறது. இவர்களுக்கு தொடக்கக் கல்வியே இறுதியானதாகவும் இருக்கிறது. இவர்களில் மிகப் பெரும்பான்மையோர் உலகச் சந்தையில் இணைக்கப்படப் போவதில்லை. மேலும் அவர்களுக்கு அந்நியமொழி (Language 2) பெருமளவு பயன்தரவும் போவதில்லை.” (புரூதியாக்ஸ் 2002) @ பென்சான் 2005)

(IV) சமகால மொழிப் போக்குகள்

தற்கால மொழியியல் பின்புலத்தில் இரண்டு போக்குகள் துல்லியமாகத் தென்படுகின்றன. ஒன்று - ஆங்கில மொழியின் பயன்பாடு, பெருமை மற்றும் ஆதிக்கம் மங்கி வருவது. இரண்டு - மொழிப் பயன் பாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஆங்கிலம் தவிர்த்த பிறமொழிகளின் முக்கியத்துவம் வளர்ந்தோங்கி வருவது. ஆங்கிலமொழி பேசாத நாடுகள் அனைத்திலும் (பரந்த இந்தியாவும் அவளது கடந்தகாலக் குழந்தைகளும் மற்றும் புவியியல் மற்றும் ஞானத்தில் நமக்கு அண்மையிலிருக்கும் தற்கால பாகிஸ் தான் தவிர) ஆங்கிலமொழி வழியாகக் கல்வி கற்பிக்கப்பட்டு வந்த இடங்களில் எல்லாம், ஆங்கிலம் நீக்கப்பட்டு விட்டது அல்லது நீக்கப்பட்டுவருகிறது என்பதை முன்பே நாம் மேலே கண்டோம். இதே நிலைதான் மற்றபிற இடங்களிலும் நடந்து கொண்டிருக்கிறது.

கி.பி. 2000 ஆம் ஆண்டு வாக்கில், எண்பது விழுக்காடு இணைய உள்ளடக்கம் ஆங்கிலத்தில்தான் இருந்தது. ஆனால் அது இப்பொழுது நாற்பது விழுக்காட்டிற்கும் கீழே வந்து விட்டது. இன்று இணையத்தில் செய்திகள் பல மொழிகளில் கிடைக்கிறது.

இந்தியாவிற்கு வருவோமானால், இந்தியாவில் 95 விழுக்காடு வணிகம், இந்திய மொழிகளிலும், ஐந்து விழுக்காடு மட்டும் ஆங்கிலத்திலும் நடப்பதாக மைக்ரோசாப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆங்கில மொழி மட்டும் தெரிந்திருந்து வேறுமொழி எதுவும் தெரியாதிருந்தால், ஒரு நிறுவனம் வேலை வழங்குவதில் நீங்கள்தான் கடைசி நபராக இருப்பீர்கள் எனும் அளவிற்கு இந்த உலகம் வந்துவிட்டது. ஆங்கிலம் மட்டுமே அறிந்திருப்பதால் பிரிட்டனிலுள்ளவர்களுக்கு மிகப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனப்பெருமைமிக்க ஆங்கில பத்திரிகை, தி எகனாமிஸ்ட், அண்மையில் ஒரு கட்டுரையில் தெரிவித்துள்ளது.

எந்த மொழித் திசையில் தற்பொழுது உலகம் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கான சான்றினைக் கீழ்க்காணும் மேற்கோள் நமக்களிக்கிறது.

"இன்றைய காலகட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு ஆங்கிலம் தவிர பிறமொழிகளில் தொடர்புகொண்டு பேசத் தெரிந்திருப்பதோடு, அவர்களது சொந்த சமூக மற்றும் பண்பாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள இயலாத நபர்களோடும் அதேபோல் அவர்கள் பணியாற்றத் தெரிந்திருக்கவேண்டும் @

(ஸ்டீபனி பெல் ரோஸ், தி தோல்மேன் சாக்ஸ் பவுண்டேஷன்; விசாக தேசாய், தி ஆசியா சொசைட்டி,www)

"அந்நியமொழிகளைப் பயில்வதற்குத் தூண்டு கோலாகவும், முன்னுரிமை வழங்கி உதவி செய்யவும் நிதி மற்றும் கொள்கை களைப் பிற நாடுகள் உருவாக்கிக் கொண்டிருக்கும் பொழுது, அமெரிக்க மாணவர்கள் இதில் வெகுவாகப் பின்தங்கி இருப்பதோடு, உலக வர்த்தகத்தில் பெரும் பாதிப்பிற்கும் உள்ளாவார்கள் என நிபுணர்கள் கூறுகின்றனர்." @ (ஆசியா சொசைட்டி நியூஸ், ஏப்ரல் 2, 2009, www)

" தனது ஏகபோக நிலையை ஆங்கிலம் இழந்து வருகிறது."

" 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலம் பெற்றிருந்த ஏகபோக நிலையை, 21-ஆம் நூற்றாண்டில் எந்தவொரு தனி மொழியும் பெற முடியாது."

"செயற்கைக்கோள் ஒளிபரப்பின் இரண்டாவது அலையில், இரண்டு போக்குகள் மேலாதிக்கம் செய்யும் என்பது தெளிவாகிறது -

1) பிற பெரும்பான்மை உலகமொழிகள், அவர்களது உலகளாவிய பரப்பினை விரிவாக்கம் செய்ய உள்ளன.

2) முன்பே களத்திலுள்ள பெரும் ஊடகங்கள், அவர்களது பணியை உள்ளூர்மயமாக்க உள்ளன.

21 ஆம் நூற்றாண்டின் காட்சி மற்றும் கேட்புப்பரப்பு பெரும் எண்ணிக்கை கொண்டதாகவும் பல்வேறு மொழிகளைக் கொண்டதாகவும் இருக்கும் என்பதை இவ்விரு போக்குகளும் சுட்டிக்காட்டுகின்றன."

"ஆங்கிலத்திற்கும் செய்தி தொழில் நுட்பத்திற்கும் இடையே யான நெருக்கமான உறவு, தற்காலிகமானதே என மெய்ப்பிக்கப் படலாம்.......ஆங்கிலம் பேசுபவர்கள் வழக்கமாக அனுபவித்து வரும் சிறந்த மற்றும் நவீனமான தொழில்நுட்பம் என்பது இனி மேல் உண்மையாக இருக்காது." @ [டேவிட் கிராடோல், 2000 (1997)]

வளர்ந்து வரும் நாடுகள் அநேகமாக எல்லாப் பள்ளிகளிலும் தத்தம் தாய்மொழியோடு, பிற மொழிகளையும் தமது மாணவர் களுக்குக் கற்றுத்தர முயற்சிக்கின்றன. இந்தப் பிறமொழிகள் என்பவை ஆங்கிலம் மட்டுமல்ல.

அமெரிக்காவில் கூட சீனமொழியைப் பயிற்சி மொழியாகக்

கொண்ட பள்ளிகளைக் காணமுடியும் எனுமளவிற்குச் செய்திகள் போய்க் கொண்டிருக்கின்றன. இப்பள்ளிகளில் 90 விழுக்காடு மாணவர்கள், சீனமொழி பேசாத பின்னணியிலிருந்து வந்தவர் களாக இருக்கின்றனர். (இந்தக் கொள்கை மிகவும் தவறாக இருப்பினும்கூட, உலகில் சீனமொழியின் வளர்ச்சி குறித்து இது பெருமளவு பேசுகிறது) 2007 ஆம் ஆண்டு அமெரிக்காவில் சீன மொழி பயில்வர்களின் எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டிலிருந்ததைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாக இருக்கிறது. (அமெரிக்கா டுடே நவம்பர் 20, 2007)

“உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில், எல்லாப் பள்ளிகளிலும் மேண்டரின் (சீனமொழி) மொழியைக் கற்பிக்குமாறு பனாமா முயன்று வருகிறது.” @ BBC செய்திகள் (www) திசம்பர் 6, 2007.

ஆங்கிலத்தை முக்கியமாகப் பேசும் நாடுகளில்கூட, ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாத மேலதிகமான மக்கள், ஆங்கிலப் பயன்பாட்டை விட்டொழித்து வருகின்றனர். 1990 ஆம் ஆண்டு அமெரிக்காவில் எடுக்கப்பட்ட கணக்குப்படி, தங்களது வீட்டில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதில்லை என 31..8 மில்லியன் மக்கள் பதிவு செய்துள்ளனர். 2000 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 47 மில்லியனாக உயர்ந்துள்ளது. அமெரிக்கா விலுள்ள மற்ற மொழிகள் பேசும் குழுக்களின் மக்கள் தொகை உயர்வைவிட, இந்த எண்ணிக்கை உயர்வு மிகவும் பெரியது. இத்தகைய முறையில் ஸ்பானிஷ் மொழி பேசுவோர் மக்கள் தொகை மட்டும் 60 விழுக்காடு உயர்ந்துள்ளது. 1980 முதல் 2011 வரை வீட்டில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தாத நபர்களின் எண்ணிக்கை, அமெரிக்காவில் 140 விழுக்காடு உயர்ந்துள்ளது. இருப்பினும் இந்தக்கால இடைவெளியில், அமெரிக்காவின் மக்கள் தொகை 40 விழுக்காடு மட்டுமே உயர்ந்துள்ளது. அப்படி யென்றால், வீட்டில் ஆங்கிலத்தை விட்டொழித்தவர்கள் எண் ணிக்கை இந்த ஆண்டுகளில் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இதற்கு மாறாக, இந்திய மேட்டுக்குடி மக்கள் (செய்தியுகத்தில், செய்திகள் பற்றி அறியாத சுவாமிகள்) முழுமையாக தேசிய சுயமரியாதையை விட்டொழித்தார்களேயன்றி, ஆங்கிலத்தை விட்டொழிக்கவில்லை. மேலும் அவர்கள் காலை-மாலை மற்றும் இரவு ஆகிய வேளைகளில் நாள்தோறும் ஆங்கிலத்திற்குத் தலைவணங்குவதையும் விட்டொழிக்கவில்லை.

முன்னாள் ஆங்கிலக் காலனி நாடுகளில் ஆங்கிலம் எவ்வாறு

ஊடகங்களிலிருந்து வெளித்தள்ளப்படுகிறது என்பதற்கு அர்ஜென்டினா நாட்டின் கீழ்க்காணும் புள்ளி விவரங்களே சிறந்த சாட்சியாகும். 1983 ஆம் ஆண்டில் 49 விழுக்காடு அர்ஜென்டைன் ஊடகம், நாட்டின் வெளியிலிருந்தது. 1996 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 22 விழுக்காடாகியது.

இவ்வாறு முன்பு மேலாதிக்க நிலையிலிருந்த எல்லாப் பகுதிகளிலும் ஆங்கிலம் பின்தங்கிவிட்டது என்பதில் எவ்வித ஐயமும் இருக்கமுடியாது.

மொழி அடிப்படையிலான எண்ணற்ற தொழில் நுட்பங்கள் (இணையம், கணினி, அலைபேசி, புத்தகங்கள் போன்றவை) தோன்றியவுடன், உள்ளூர் மொழிகளின் வணிக வாய்ப்புக்களை மிகைப்படுத்திக் கூறவேண்டியதில்லை.

ஆங்கில மொழி நமக்கு ஏற்படுத்திய கல்வி, பொருளாதாரம், வணிகம் மற்றும் பண்பாட்டுத் துறைகளிலான இழப்புக்களைக் குறித்து நாம் மதிப்பிடவேண்டியதும் தேவையாகும். இவை பற்றிச் சுருக்கமாகக் கீழ்க்காணும் பகுதியில் குறிப்பிடப்படுகிறது.

(V) ஆங்கிலக் கூடையில் எல்லா முட்டைகளையும் போடுவதால் நேரிடும் பிற ஆபத்தான இழப்புகள்

வணிகத் தேவைகளின் கட்டாயத்தால், உலகிலுள்ள அனைத்து நாடுகளும் தற்பொழுது பிறநாடுகளின் மொழிகளைப் பயில்வதில் ஈடுபட்டுள்ளன. ஆனால் நாமோ இரவும் பகலும் ஆங்கிலக் கல்லறையில் நடனமாடிக் கொண்டிருக்கிறோம். பிறமொழிகளைப் பயிலவேண்டிய தேவை குறித்து எவ்வித கவனமும் நாம் செலுத்துவதில்லை. இதன் விளைவாக, நாம்அதிக அளவு பொருளாதார மற்றும் வணிக இழப்புகளால் துன்புறு கிறோம். பிறநாடுகளின் மொழிகளை அண்மை எதிர்காலத்தில் பயிலவில்லையெனில், நாம் முழுமையாகத் தனிமைப்படுத்தப் படுவோம். இன்றைய காலகட்டத்தில் ஆங்கிலத்தைவிட சீன மொழியும், ஸ்பானிஷ் மொழியும் மிகவும் முக்கியமானவை. ஆனால் அண்மை எதிர்காலம் குறித்து மட்டுமல்ல, நிகழ்காலத் திலுங்கூட நாம் முழுமையான குருடர்களாக இருக்கிறோம். உலகில் தாய்மொழி கோலோச்சும் அனைத்து நாடுகளிலும், முன்பு இருந்தது போல் அல்லாமல், தற்பொழுது ஆங்கிலம் வெளியேற்றப் பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் நாமோ கல்வி, பண்பாடு

மற்றும் செய்தித் தொடர்பு வெளிகள் என அனைத்தையும் மென் மேலும் ஆங்கிலத்திற்குக் கைமாற்றிக் கொண்டிருக்கிறோம். உலக வணிகத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறைந்து வருவதை மேலோட்டமாகப் பார்த்தாலே, எவ்வகை நன்மைகளை ஆங்கிலம் நமக்குக் கொடுத்துள்ளது என்பதை அறியப் போதுமா னதாகவுள்ளது. 1950 ஆம் ஆண்டில், உலக வணிகத்தில் இந்தியா வின் பங்கு 1.78 விழுக்காடாக இருந்தது. ஆனால் இப்பொழுது அது 1.50 விழுக்காட்டிற்கும் குறைந்து விட்டது. இந்த ஆண்டு களில் இந்தியாவில் ஆங்கிலம் அதிக அளவில் பரந்து வளர்ந்தது நம் அனைவருக்கும் மிக வெளிப்படையாகத் தெரிந்ததுதான். உலக வணிகத்தில் இந்தியாவின் பங்கு இப்படித் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வரும் செயல், நமக்குச் சொல்லும் உண்மை யென்னவென்றால், இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் ஆங்கிலத் தின் மீது செய்யும் சவாரி, 'ஒற்றைக்கண் பெண்குதிரையும் குருட்டு ஓட்டுநரும் ' எனும் குழந்தைகள் கதை போலத்தான் இருக்கும். 'ஆங்கிலம்தான் இந்தியாவின் முன்னேற்றத்திற்கான சாவி' எனச் சில நாட்களுக்கு முன்பு, ஐக்கிய நாடுகள் சபை வாயிலாகப் புகழடைந்த மாண்புமிகு அமைச்சர் திரு. சசி தாரூர் குறிப்பிட் டார். ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, மொழி குறித்த ஐ.நா. சபையின் ஆவணங்கள் சிலவற்றை யேனும் படித்திருந்தால், அவர் உறுதியாக ஒருபோதும் இப்படிக் கூறியிருக்க மாட்டார். அறியாமையே நல்ல இலாபத்தைத் தரும் பொழுது, இந்திய அமைச்சர் ஒருவர் எதற்காகப் படிக்க வேண்டும்?

ஆங்கில மொழி நமக்கு ஏற்படுத்திய, தொடர்ந்து மென் மேலும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற, பண்பாட்டு இழப்புகள் குறித்து மிகக் குறைவாகச் சொல்வதே நல்லது. தங்களது மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, சமயம், அறிவு அல்லது அறிவியல் குறித்துக் கூட நெருக்கமான தொடர்பு இல்லாத ஒரு தலைமுறை உயர்ந்த கலைப்படைப்பு குறித்த எந்தவொரு ஆழமான நல்லுணர்வோ, பாராட்டோ கொள்ளாத ஒரு நிலப்பிரபுத்துவத் தலைமுறை, உருவாகி வருகிறது. முன்பு பெர்சிய மொழியை மோகித்துத் திரிந்த இந்திய மேட்டுக் குடிமக்களை 'மெலக்காஸ்' (MALECHHAS - வீழ்ச்சி அடைந்தவர்கள்) என பாபாநானக் அந்த சமயம் குறிப்பிட்டார். இப்பொழுது, தற்கால இந்திய மேட்டுக்குடி மக்கள் பாபாநானக்கின் அறிவுரையை ஆழமாகப் புதைத்து விட்ட பிறகு, காந்தி மகாத்மாவை யார் கேட்கப் போகிறார்கள். அவர் வெறும் 'வேட்டி' மட்டும் கட்டியவர்தானே! இந்தியப்

பண்பாட்டிற்கு விடைகொடுத்துவிட்டு, அவர் ‘கழுத்துப் பட்டை (டை) அணிந்திருந்தால், நிகழ்வுகள் வேறுமாதிரி இருந்திருக்கும்.

(VI) ஒரு மொழியின் மரணம்

ஆங்கிலத்தைவிடப் பழமையான இலக்கிய வரலாறு உடைய (அதைவிடச் செழுமையானதும் கூட) பஞ்சாபி மொழி, உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளில் பத்தாவது இடத்திலுள்ளது. இதுதான் இந்தியாவிலுள்ள பஞ்சாப் மாநிலத்தின் முதல் அலுவலக மொழியாகும். இப்படிப்பட்ட பஞ்சாபி மொழிகூட, இறுதியில் மரணமடைந்துவிடக்கூடிய நிகழ்ச்சிப் போக்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என அண்மையில் ஒரு கட்டுரையில் நான் (ஜோகாசிங், 2013) குறிப்பிட்டிருந்தேன். பட்டியலிடப்பட்ட பிற இந்திய மொழிகளின் நிலையும் இதே போல்தான் உள்ளது. இந்தி மொழியுங்கூட இந்தப் பட்டியலில் சேர்க்கப்படலாம். பட்டிய லிடப்படாத மொழிகளைப் பற்றி எதுவும் பேசாமலிருப்பதே நல்லது. அவற்றில் பல ஏற்கனவே அழிவின் விளிம்பில் உள்ளன. இந்திய மொழிகள் குறித்த மதிப்பீட்டை உருவாக்க யுனெஸ்கோ வின் (2003) ஆவணமாகிய “மொழிகளின் உயிர் வாழும் திறன் மற்றும் அழியும் அபாயம்” என்பதைப் படிக்குமாறு வாசகர்களை நான் வேண்டுகிறேன். இது குறித்து மேலதிக விவரத்திற்குப் போக நான் விரும்பவில்லை. இருப்பினும், இந்திய மொழிகள் சென்றுகொண்டிருக்கும் திசைவழி குறித்துக் கீழ்க்காணும் அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

“மொழியின் மரணம் குறித்த முன்மாதிரியான நிகழ்வை இது பிரதிபலிக்கிறது. தங்களது சொந்த மொழி குறித்து மக்கள் அவமானமடைகின்றனர். மேலும் அதிக கௌரவமிக்க ஒருமொழிக்காகத் தம் தாய்மொழியை விட்டொழிக்கின்றனர். தங்களது குழந்தைகளுக்குத் தங்களது சொந்தமொழியைக் கைமாற்றி விடுவதில்லை. எனவே ‘சிறுபான்மை மொழி’, அதைப் பேசுபவர்களாலேயே தீவிரமாக ஒதுக்கப்படுகிறது; மிகமிகக் குறுகிய தருணங்களிலேயே பயன்படுத்த பொருத்தமானதாக மாறுகிறது; இறுதியில் உள்நுழைந்த மொழியால் முழுமையாகப் பிடுங்கியெறியப்படுகிறது.” (மக்மகான், 1994:285) @ (எக்கார்ட் டி மற்றும் பிறர், 2006)

“கல்விமுறையில் உள்ளூர் மொழிகள் காணாமல்போவது, மொழி இழப்பிற்குக் காரணமாகவுள்ளது. சிறுபான்மை மொழிகளைப் பாதுகாப்பதிலும், அதன் விளைவாக அவர்தம்

பண்பாட்டைக் காப்பதிலும் பள்ளிகள் மிக முக்கியமான பங்காற்றுகின்றன.” @ (எக்கார்ட் டி மற்றும் பிறர், 2006)

ஆனால், இந்திய மேட்டுக் குடிமக்கள் இயலுமானால் நாளையே அனைத்துத் தாய்மொழி வழிக்கல்வி நிலையங்களையும் இழுத்து மூடி விடுவார்கள். இந்திய அறிவுசார் ஆணையம் (Indian Knowledge Commission), இந்த விடயத்தில் அறியாமை மிக்க முகவராக இருக்கிறது). இது பற்றிய உண்மையை அறியவேண்டுமானால், ஆங்கில மொழி குறித்த அறிவு ஆணையத்தின் பரிந்துரைகளை தயவுசெய்து நீங்களே படித்துப்பாருங்கள்.

(VII) ஒரு வேண்டுகோள்

மொழிக் கொள்கை குறித்து வெளிவரவிருக்கும் எனது நூலின் சில பகுதிகளிலிருந்து இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த நூல் வெளிவரச்சிறிது காலம் பிடிக்கும், ஆனால் இந்தப் பிரச்சனைக்கு உடனடியானதோர் எதிர்வினை தேவை என நான் உணர்ந்தேன். மொழிப் பிரச்சினை குறித்த சர்வதேசக் கருத்துக்களை இந்தியக் குடிமக்களிடம் உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என நான் கருதினேன். எனவே இச்சிறு நூலின் பெரும்பாலான பகுதிகள் பஞ்சாபி மொழியில், பஞ்சாபி ஊடகங்கள் வாயிலாக, ஏற்கனவே பதிப்பிக்கப்பட்டுள்ளன. பஞ்சாபில் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த பல சொற் பொழிவுகளில் இத்தகைய கருத்துக்கள் என்னால் முன்வைக்கப்பட்டுள்ளன. இச்சிறுநூல் பஞ்சாபி, இந்தி, மற்றும் ஆங்கில மொழிகளில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. (இயன்றால் பிற இந்திய மொழிகளிலும் கூட) இதனால் இக்கருத்துக்கள் விரிவான மக்கள் திரளிடம் சென்று சேரும். எனவே, தம் தாய்மொழியை நேசிக்கும் இந்திய மக்களிடமும், தாய்மொழி அடித்தளம் இல்லாமல் இந்தியா, ஒரு நவீன நாடாக முன்னேற முடியாது என்பதில் உறுதியான நம்பிக்கையுடையவர்களிடமும், இச்சிறுநூலைப் பிற இந்தியர் களது கவனத்திற்குக் கொண்டு செல்லுமாறு நான் வேண்டுகிறேன். இந்த ஆவணத்தை யார் யார் எந்தெந்த மொழிகளில் கொண்டு வருகிறார்களோ, தயவு செய்து அவர்கள் அதைச் செய்யட்டும். எனது நெஞ்சின் மையத்திலிருந்து அவர்களுக்கு நான் நன்றி சொல்வேன். சில மொழிகளுக்கு சிலர் ஏற்கனவே பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால், நீங்கள் மொழியாக்கம் செய்வதற்கு முன்னால், தயவு செய்து என்னோடு தொடர்பு கொள்ளுங்கள். முன்பே விவரிக்கப்பட்ட காரணங்களோடு கூடவே, நமது தாய்

மொழியைத் தழுவிக் கொள்ள வேண்டிய இன்றியமையாத மற்றோர் காரணமும் உள்ளது. நமது தாய் மொழிகளில் பல்லாயி ரக்கணக்கான ஆண்டுகளாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ள ஞானத்தை, வரக்கூடிய தலைமுறைகளுக்குக் கைமாற்றிவிடவும், உள்வாங்கச் செய்யவுமான தேவை உள்ளது. இதுவே நமது உச்சகட்டத் தார்மீகப் பெறுப்பாகும்.

இதில் சிறிதளவு தாமதம் நேரிட்டாலும், நாகரிக இழப்புகளே முடிவில் ஏற்பட்டுவிடும்.

இங்கே ஒப்பீட்டளவில் மிக நீளமான பார்வை நூல் பகுதியை நான் சேர்த்துள்ளேன். அதனால் இச்சிக்கல் குறித்து மேலும் ஆய்வு மேற்கொள்ள ஆர்வமுடைய எவரொருவரும் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நன்றிகள்

எண்ணற்ற அறிஞர்களது ஆய்வுகளிலிருந்து பெருமள விலான எடுத்துக்காட்டுகள் இந்த ஆவணத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளன. எனது நெஞ்சார்ந்த நன்றிகளை அவர்கள் அனை வருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது கடும் உழைப்பும் அர்ப்பணிப்பும்தான் தாய்மொழிகளுக்கு வலிமையான தத்துவார்த்த ஆதரவை வழங்கியுள்ளது.

தாய்மொழிகள் வெல்க!

ஃ ஃ ஃ

இந்திப் பதிப்பு

கீழ்க்கண்டவரால் இந்த ஆவணத்தின் இந்தி வடிவம் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

லோக் மிட்டார் பிரகாசன், 1 / 6588, பூர்வி ரோஹ்டாஸ் நகர், சதாரா, டெல்லி - 110 032

REFERNCE -CUM - BIBLIOGRAPHY

Alisjahana S. Takdir. 1972. Writing a Normative Grammar for Indonesian. Language Sciences (Feb. 1972) : 11-14.

______ . 1976. Language Planning for Modernization: The Case of Indonesian and Malaysian. The Hague : Mouton.

Ammon, Ulrich. 2009. Book Review. Medium of Instruction Policies. Which Agenda? Whose Agenda? by J.W. Tollefson and A.B.M. Tsui (eds). Mahwah, NJ and London: Lawrence, Erlbaum, 2004.

Bell, R. T. 1976 Sociolinguistics: Goals, Approaches and Problems. New York: St. Martins' Press.

Benson, Carol. 2005. The Importance of Mother Tongue-based Schooling for Educational Quality, Commissioned study for EFA Global Monitoring Report. Centre for Research on Bilingualism. Stockholm University.

Bernstein, B. 1966. Elaborated and Restricted Code: An Outline. Sociological Inquiry. 362:254-61.

______ . 1971 Class, Codes and Control: Theoretical Studies towards a Sociology of Language. London: Routedge & Kegan Paul.

______ . 1974. A Brief Accont of the Theory of Codes. Appendex to Bernstein 1971.

Boas, F. 1911. Handbook of American Indian Languages. Washington: Smithsonian Inst.

Bokmla, E & J. Tlou. 1977. The Consequences of the Language Policies of African States vis-avis Education. In P. Kotey and H. Der-Houssikian, Language and Linguistic problems of Africa Colunbia. SC: Hornbeam press.

Branko, F. 1980. Laguage planning and Language Policies in Yugoslavia with Special Reference to Croation and Macedonian. Lingua. 51.1:55-72.

Cronian, S. 1978. Nation Building and the Irish Language Revival Movement. Eire Ireland, 13:7-14.

Davis, F. B. (ed.). 1967. Philippine Language Teaching Experiments. Quezon city: Alemar phoenix.

De Silva, M. W. S. 1976. Diglossia and Literacy. Mysore: central Instiute of Indian Languages.

Dua, H. R. 1976. Language Planning and political Theory. International Jounral of Sociology of Language 118:1-6.

Eckert, T. et al. 2006. Is English a 'killer language', The globalisation of a code. Ethistling 1:106-18

Fasold, R. 1984. The Sociolinguistics of Society. Basil Blackwell.

Ferguson, C. 1968. Language Development. In C. Ferguage & J. Das Gupta (eds.) pp. 27-36.

Ferguage, C. & J. Das Gupta. 1968. Language Problems of Developing Countries. New York: John Wiley and Sons.

Fishman, J. 1964. Language Maintenance and Language Shift as Fields of Inquiry. Linguistics. 9: 32-70.

______ . 1965. Who Speaks what Language to Whom and When. Linguistics. 2: 67-8.

______ (ed.) 1968. Readings in the Sociology of Language. The Heague : Mounton.

______ (ed.) 1974. Advances in Language Planning. The Hague: Moton.

______ . 1975. The official Languages of Israel: Their Status in Law and Police Attitudes and Knowledge Concerning Them. In J. Savard and R. Vignaault (eds.), Multilingual Political Systems: Problems and Solutions. Quebec: Les preses de l'Universite' Laval pp. 497-535.

Ferguson, C. 1977. Linguistic Theory. In Bilingual Education: Current Perspectives. Vol. 2 Linguistics. pp. 43-52.

Garvin, P.& M. Mathiot. 1956. The Urbanization of Guarani Language. In A.F.C Wallac (ed.), Men and Cultures: Selected Papers from the Fifth Internatinal Conference of Anthropological and Ethnological Sciences. Phiadelphia: University of Pennsylvania Press. pp. 365-74.

Gonzatez, G. 1977. Teaching Bilingual Children. In, Bilingual Education Current Perspectives. Linguistics: pp 53-9.

Graddol, David. 2000 (1997). The Future of English? A Guide to Forecasting the Popularity of the English Language in the 21st century. The Bitish Council.

Halliday, M.A.K. 1973. The Linguistics Sciences and Language Teaching. Longman.

Halliday, M.A.K. 1973. Explorations in the function of Language. Edward Arnold.

______ . 1978. Language as Social Semiotic. Edward Arnold.

Harries, L. 1976. The Nationalization of Swahili in Kenya. Language Sciences 5. 2: 153-64.

Haugen, E. 1966. Language Conflict and Language planning: The Case of Modern Norwegian. Cambridge, MA: Harvard University Press.

______ .1966. Linguistics and Language. In W. Bright (ed.) Socioliguistics. The Hague: Mouton pp. 50-71.

______ .1968. Language Planning in Modern Noway. In J. Fishman (ed.), pp 673-86.

Hopkins, T. 1977. The Development and Implementation of the National Language policy in Kenya. in Kotey & Der Houssikian. pp. 84-96.

Hymes, D. 1972. Models of the Interaction of Language and Social Life. In J.J. Gumperz and D. Hymes, Directions in Socioliguistics : The Ethrography of Communication. Holt Rinehart, and Winston Inc. pp. 35-71.

Jakobson, R. 1960. Closing Statement: Linguistics and Poetics: In T. A. Sebeok (ed.), Style in Language. MIT. pp. 350-77.

Jernudd, B. 1973. Language Planning as a Type of Language Treatment. In J. Rubin & R. Shuy (eds), Language Planning: Current issues and Research. Washington, DC: Georgetown University Press. pp. 11-23.

Labov, W. 1966. The Social Stratification of English in New York City. Washington, DC: Centre for Applied Linguistics.

______ .1970. The study of Language in its Social Context. Studium Generale. 23: 3087.

Le'vi Strauss, C. 1972. Structural Anthropology. Penguin.

Li, C. and S. A. Thompson. 1979. Chinese: Dialect Variation and Language Reform. In T.Shopen (ed.), Language and Their Status. Cambridge, MA : Winthrop Publishers. pp. 295-332.

Modiano, N. 1966. Reading Comprehension in the National Language: A Comparative Study of Bilingual and All Spanish Approaches to Reading Instruction in Selected Indian Schools in the Highlands of Chiapas. Mexico. Ph.D. Dissertation, University of New York.

______. 1973. Indian Education in the Chiapas Highlands. New York: Holt, Rinehart, and Winston.

Neustupny, J. 1977. Language Planning for Australia. Language Sciences, 45:28-31.

Pulston, C.B. 1977. Research. In, Bilingual Education: Current Perspectives. Linguistics. pp. 87-151.

Polome', E. and C.P. Hill. 1980. Language in Tanzania. Oxford: Oxford University Press for the International African Institute.

Ramos, M. et al. The Determination and Implementation of Language Policy Dobbs Ferry, NY. Oceana Publications.

Rawat, P.S. 1985 (1995). Midline Medical Dictionary. New Delhi: B Jain Pvt. Publishers Ltd.

Ray, P.S. 1968. Language Standardization. In Fishman (ed.). pp. 754-65.

RICARDO M.A. DURAN NOLASCO. 2009. 21 Reasons why Filipino children learn better while using their Mother Tongue: A PRIMER on Mother Tongue-based Multilingual Education (MLE) & Other Issues on Language and Learning in the Philippines. Guro Formation Forum, University of the Philippines.

Robinson, W.R. 1972. Language and Social Behaviour. Penguin.

Rubin, J. 1973. Language Planning: Discusstion on Some Current Issues. In Rubin and Shuy (eds.). pp. 1-10.

Rubin, J. and B. Jernudd (eds.). 1971. Can Languages be Planned. Honolulu: University Press of Hawaii.

Rubin, J. & R. Shuy (eds.). 1973. Language Planning: Current Issues and Research. Washington, DC: Georgetown University Press.

Singh, Joga. 2002. Maat bhaasha da mahatav. Samdarshi. Punjabi Academy, Delhi.

Singh, Joga. 2013 panjabi nu kinna ku khatra (The Intensity of Endangerment to Punjabi, in Punjabi). Philhal 17:143-58.

Skutnabb-Kangas, T. 1975. Bilingualism, Semibilinguism, and Social Achievment. Paper Presented at the 4th Internaitonal Congress of Applied Linguistics. Stuttgart.

______. and P. Toukomaa. 1976. Teaching Migrant Children's Mother-Tongue and Learning the Language of the Host Country in the Context of the Socio-cultural Situation of the Migrant Family. Helsinki: The Finnish National Commission for UNESCO.

Spolsky, B. 1977. American Indian Bilingual Education: Linguistics, 19:57-72.

Tucker, G.R., 1977. Bilingual Education: Current Perspectives, Vol. 2. Linguistics. Arlington, VA: Centre for Applied Linguistics.

UNDP Report. 2004.

UNESCO. 1953. The Use of Vernacular Languages in Education. Monographs on Fundamental Education, No. 8. Paris.

UNESCO. 1953. The Use of Vernacular Languages in Education. Monographs on Fundamental Education, No. 8. Paris.

UNESCO. 1968. The Use of Vernacular Languages in Education. In Joshua A. Fishman (ed.),

UNESCO. 2008. The Improvement in the Quality of Mother Tongue - Based Literacy and Learning. Bankok: UNESCO.

Wijnstra, J. 1978. Education of Children with Frisian Home Language. Paper Presented at the 19th International Conference on Applied Psychology. Munich.

Whorf, B.L. 1962. Language Thought and Reality. MIT.

Joga Singh, M.A., M.Phil., Ph.D. (University of York, U.K.)
Commonwealth Scholarship Awardee (1990-1993)
Professor & Ex-Head, Department of Linguistics & Punjabi Lexicography
Director, Centre for Diaspora Studies
Punjabi University, Patiala - 147 002 (Punjab) - INDIA.
Mobile: +91-9915709582 Home: +91-175-2281582
Office: +91-175-304-6241/6511
E-mail: virkjoga5@gmail.com , jogasinghvirk@yahoo.co.in

*****